30470

21629

தமிழ் வாழ்க !

# தொல்காப்பியம்

என்னும்

## இராமலிங்க பகீரதம்

## திறனாய்வுரை

ச. பாலசுந்தரம்,
தஞ்சாவூர்.

30470

தமிழ் வாழ்க

# தொல்காப்பியம் என்னும் இராமலிங்க பகீரதம் - ஒரு கருடப்பார்வை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ் செய்த அருந்தவத்தான் இராமலிங்கர் பணிமன்றம் வாயிலாகத் திருவாளர்கள் மு. இராமலிங்கம், பகீரதன் என்னும் இருபெரும் ஆராய்ச்சியாளர்களான் ஆராயப்பெற்று இன்றைக்கு வழக்கிலுள்ள தொல்காப்பியத்தில் அச்சிட்டோரான் நேர்ந்த குறைகள் களையப் பெற்றுக் கூட்டியும், குறைத்தும் மாற்றியும் செம்மைப்படுத்தப் பெற்றுள்ள தொல்காப்பியம் என்னும் புதிய தமிழிலக்கண நூலினை விதிவயத்தான் காணும் பேறு பெற்றேன் அதனை ஒருமுறை நோக்கிய எனது கருடப் பார்வையில் தோன்றிய கருத்துக்களை இக்கட்டுரை வாயிலாக மிகச் சுருக்கமாக வரையலானேன். இதனைத் தமிழுணர்வுடைய யாவரும் தெரிந்துகோடல் அவர்தம் கடப்பாடாகும்.

**முன்னுரை :-**

இராமலிங்கர் பணிமன்றம் வாயிலாக வெளிவந்துள்ள தொல்காப்பியம் என்னும் இந்நூல் தமிழகப்பல்கலைக் கழகங்களிற் பாடநூலாக அமைத்துப் பயிற்றப்பெற்று வரும் தொல் காப்பியம் என்னும் நூலினின்று பெரிதும் வேறுபட்டுள்ளது. அங்ஙனம் வேறுபடுத்திச் செய்யப்பட்டுள்ள இதுவே அகத்தியராற் செய்யப்பட்ட தொல்காப்பியத்தின் செம்மையான வடிவம் என ஆய்வாளரிருவரும் இந்நூல் விரிவுரையிலும் ஆய்வுரையிலும் கூறியுள்ளனர்.

இனி வழக்கிலுள்ள தொல்காப்பிய நூலின் தொடக்கத்தில் பனம்பாரனாரால் செய்யப்பட்டதாக அந்நூல் உரையாசிரியன்மார் உரையொடு காணப்படும் சிறப்புப்பாயிரம் என்னும் நூன்முகம் இதன்கண் சேர்க்கப்படவில்லை. மற்று இந்நூலைப் பற்றியும் நூலாசிரியர் பற்றியும் நூலமைப்புப்பற்றியும் இதன்கண் உள்ள விரிவுரை ஆய்வுரைகளுள் ஓரளவு கூறப்பட்டுள்ளமை தவிர ஆய்வாளர்களின் முன்னுரையாக யாதும் காணப்பட வில்லை. இக்காலத்தில் பெரும்பான்மையும் வழக்கிலுள்ள பதிப்புரை அணிந்துரை முதலியவைகளும் காணப்பட வில்லை. முன்னுரை முதலியவை தேவையில்லை என்பது அவர் தம் கருத்துப்போலும். முன்னுரை இன்மையால் ஆராய்ச்சியாளர் களின் கல்வி முதலாய தகுதிகளை அறியும்வாய்ப்பு நேரவில்லை.

எனினும் 1980-ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ மூன்றாண்டுகள் அகத்தியர் செய்த இத்தொல்காப்பியத்தின் மெய்யான வடிவம் பற்றியும் உண்மையான பொருள் பற்றியும் இவ்வாராய்ச்சியாளருள் ஒருவராகிய திரு பகீரதன் அவர்களால் 'சத்திய கங்கை' என்னும் சமய இலக்கிய இதழ்களில் வெளிவந்துள்ள கட்டுரைகள் முன்னுரையில்லாத குறையை ஓரளவு போக்குதலான், வேண்டுமிடத்து அவற்றினின்று சில செய்திகளை இக்கட்டுரையுள் பயன்படுத்தியுள்ளேன்.

வழக்கிலுள்ள தொல்காப்பியத்தைப் போலவே இந்நூலும் மூன்று பெரும் பகுதியாகவும் இருபத்தேழு உட்பகுதியாகவும் அமைக்கப்பட்டுள்ளது. வழக்கிலுள்ள நூலுள் பெரும் பிரிவுகள் அதிகாரம் என்னும் பெயரோடுள்ளன. இந்நூலுள் அவை படலம் எனக் காணப்படுகின்றன. உட்பிரிவுகள் யாவும் வழக்கில் உள்ள நூலை ஒட்டியே உள்ளன. எனினும் நிரலமைப்பில் பெரிதும் வேறுபட்டுள்ளன.

ஒவ்வொரு இயலினுள்ளும் நூற்பா எண்ணிக்கையும் வரிசை முறையும் மாறுபட்டுள்ளன பல நூற்பாக்களின் தொடக்கத்தில் முன்னைய நூலுள் காணப்பெறாத அடிகள் சில பல சேர்க்கப்பட்டுள்ளன. சிலவற்றுள் இடையிலும் இறுதியிலும் சில சொற்கள் மாற்றப்பட்டுள்ளன முன்னைய நூலுள் ஓரியலின்கண் உள்ளவை இந்நூலுள் வேறுவேறு இயல்களில் மாற்றி வைக்கப்பட்டுள்ளன சில நூற்பாக்கள் ஒன்றற்கு மேற்பட்ட இடங்களிற் சேர்க்கப் பெற்றுள்ளன.

இங்ஙனம் பல்வேறு மாற்றங்கள் செய்தமைக்கு விரிவுரையுள் விளக்கங்கள் தரப்பெற்றுள்ளன, அவற்றிற்கு வேறு பிற நூல்களிலிருந்து ஆதாரம் காட்டப்படவில்லை, சேர்க்கப் பெற்றுள்ளனவும் மாற்றப்பட்டுள்ளனவும் "ஆசிரியரின் கருத்தினை நுண்மையாகக் கூர்ந்து வரலாற்று முறைப்படி அமைக்கப்பட்டவை" என ஆய்வாளர்கள் இடந்தோறும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். வழக்கிலுள்ள நூலுள் அவை காணப்படாமைக்குக் காரணம் அச்சிட்டவர்கள் பலவற்றை அறியாமல் பிழை செய்துவிட்டனர் என்று கூறுகின்றனர்.

மூன்று படலங்களிலும் விரிவுரை ஆய்வுரைகளுக்குப்பின் இயல் தொடங்குகிறது. சிலவற்றிற்கு முடிவுரையும் உளது நூற்பாக்களின்பின் அவற்றிற்கான பதவுரையோ, பொழிப்புரையோ கூறாமல் இரண்டும் கலந்த விளக்கங்களுடன்

கருத்துரைகளே கூறப்பட்டுள்ளன. எழுத்துப்படலம் சொற்படலங்களுக்குப் பெரும்பான்மையும் வழக்கிலிருந்து எடுத்துக் காட்டுத் தரப்பட்டுள்ளன. பொருட்படலத்திற்குப் பெரும்பாலும் எடுத்துக்காட்டுகள் இல்லை ஒரோவோரிடத்து அருட்பாவினின்றும் அமரகவி பாரதிபாக்களினின்றும் வரலாறுகள் காட்டப்பட்டுள்ளன. அதனால் நூற்பாக்களின் பொருளைத் தெற்றென அறிய இயலவில்லை கருத்துரைகளுள் காணப்பெறும் சொற்றொடர் விளக்கங்கள் நூற்பாவின் எந்தச் சொல் சொற்றொடருக்குரியவை என்று விளங்கிக்கொள்ள இயலவில்லை.

இனி, இந்நூலைப் பற்றியெழுந்த உணர்வுகளையும், கருத்துக்களையும். ஐயங்களையும் சுருங்கக்கூறுகின்றேன்.

இந்நூலைப் பிரித்து ஆங்காங்கே படித்துப்பார்த்தபொழுது எல்லையற்ற மகிழ்வுற்றேன். தொல்காப்பியத்தின் உண்மையான வடிவத்தையும் அமைப்பினையும் பொருளையும் இந்த இருபதாம் நூற்றாண்டின் கடையிலேனும் காண நேர்ந்தமையே அதற்குக் காரணம்.

பெரிதும் உவப்புற்றேன். இற்றைக்கு இரண்டாயிரமாண்டுக்கால எல்லையில் முன்னர் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களும், படிப்பாளிகளும், இற்றைக்கு வாழ்ந்துவரும் தமிழ்ப் பேராசிரியர்கள் மொழி ஆய்வாளர் மொழியியல் விற்பன்னர் எவரும் செய்யாத செய்யக்கருதாத பெருஞ்செயலை இந்நூல் ஆய்வாளர் இருவரும் மேற்கொண்டு அதனைக் கடைபோகச் செய்துள்ளமையைக் காண நேர்ந்தமை அதற்குக் காரணமாகும்.

பேரானந்தமுற்றேன். தமிழகத்தில் தமிழ்த்துறைகள் உள்ள பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் செய்ய முன்வராத நிலையில் இவ் இருபெரும் தமிழிலக்கண மேதைகளை இனங்கண்டு அவர்களைக் கொண்டு உண்மையான வடிவத்தொடும் பொருளொடும் தொல்காப்பியத்தை யாதொரு கைம்மாறும் கருதாமல் மிக அழகாக வெளியிட்டுள்ள இராமலிங்கர் பணிமன்றத்தாரின் தமிழ்த் தொண்டினைக் கண்டமையே அதற்குக் காரணமாகும்.

மேலும் பேராச்சரியமும் பெரும் வியப்பும் இறும்பூதும் எய்தினேன் இந்நூலைப் பதினாயிரம் ஆண்டுகட்குமுன் அகத்தியர் செய்தளித்த வடிவும் அமைப்பும் இவையே என நுணுகி

ஆராய்ந்து தமது நெடுநோக்கமைய இத்தொல்காப்பியத்தைப் பொருளொடு எழுதியருளியுள்ள ஆராய்ச்சியாளருள் ஒருவர் தமிழ்ப் பேராசிரியரல்லாதவர்; கூலிக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் வேண்டித் தமிழ் கற்றுப் பயிற்றுவிக்கும் பள்ளியாசிரியருமல்லர்; ஒரு பத்திரிகை ஆசிரியர். சத்தியகங்கை இதழாசிரியர் திரு பகீரதன் என்று காணும் போது வியக்காமலிருக்க இயலுமா? மற்றொரு பெருமகனார் சிலகாலம் தமிழாசானாய்த் தொண்டாற்றியவர்; தம்மை எவ்வகையானும் வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாதவர்; அடக்கத்திற்கு எடுத்துக்காட்டாக இருப்பவர். திரு மு இராமலிங்கம் அவர்கள் இந்நூல் வெளிவரப் பெரிதும் துணை புரிந்துள்ளார் எனத் தெரிகிறது இவருடைய தொல்காப்பியப் பேரறிவிற்கு இவர் வெளியிட்டுள்ள "தொல்காப்பிய வளம்" என்னும் நூல் பெரியதொரு சான்றாகும்.

பத்தாண்டுகட்குமுன் தொடர்ந்து சத்தியசங்கையில் வெளிவந்த கட்டுரைகளைக் கண்ணுற்று அவை ஒரு நூலாக வெளிவரின் தமிழ்மொழிக்கு அஃதொரு அரிய பேறாகும் என்றெண்ணி இவ் இருபெரும் ஆய்வாளர்களையும் இலம்பாடணுகாதவாறு பேணிப் புரந்து இக்காலை இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள தொழில் வணிக முதலாளர், அருட்செல்வர் பொள்ளாச்சி வள்ளல் திரு. நா மகாலிங்கம் அவர்கள் பல்லாற்றானும் போற்றப்பெறற்குரியவர். இந்நூல் உள்ளளவும் இப்பெருந்தகையின் புகழும் நிலைபெறுமென்பதில் ஐயமில்லை.

இனி மற்றொரு பக்கம் சொல்லொணா வேதனைப்பட்டேன். ஏன்? தொல்காப்பியத்தின் உண்மைப் பொருள் அறியாமல் அகப்பொருள் பற்றியும் புறப்பொருள் பற்றியும் சங்க காலப் புலவர் எனப்படுவோர் மக்களின் உயர்ந்த வாழ்வொழுக்கம் பற்றிச் சிறிதும் சிந்தியாமல் புனைந்து சென்றுள்ள பாக்கள் குறுந்தொகையாகவும், நற்றிணையாகவும் நெடுந்தொகையாகவும் ஐங்குறு நூறாகவும் புறநானூறாகவும் தொகுக்கப்பெற்று அவற்றைப் பயின்றும் பயிற்றியும் வரும் பொல்லாங்கையும் இனி மாற்ற முடியாத அளவிற்குத் திணையும் துறையும் வகுத்து அமைக்கப்பெற்றிருப்பதும் வேதனைக்குக் காரணங்களாகும்.

மேலும் தொல்காப்பியத்தின் பழைய பிழையான உரை விளக்கங்களை ஆராயாமல் கண்மூடித்தனமாக ஏற்றுச் செய்யப்பட்டுள்ள இறையனார் களவியல், நம்பியகப்பொருள்

விளக்கம் புறப்பொருள் வெண்பா மாலை யாப்பருங்கலம் போன்ற தவறான நூல்கள் இன்று பாடநூல்களாகப் பயிற்றப் படுவதும் வேதனைக்குக் காரணங்களாகும்.

மிகவும் வெட்கப்பட்டேன், அகத்தியர் மனிதகுலம் உய்ய அருளிச் செய்த தொல்காப்பியத்தைப் பின்னர் பயின்று இலக்கியம் படைக்க முற்பட்ட படிப்பாளிகள் அவர் எழுதிய நூற்பாக்களைச் சிதைத்தும் அழித்தும் மாற்றியும் கூட்டியும் குறைத்தும் தத்தம் மனம் போனவாறும் தங்கள் விருப்பத்திற் கேற்றவாறும் அதன் உருவத்தையே மாற்றியுள்ள கொடுமை களை எண்ணும் ஒரு தமிழன் நாணாமல் இருக்கமுடியாது. அவ்வாறு மாசுபடுத்தியது மட்டுமன்றிச் சமய நோக்கங் காரண மாகவும் அறியாமை காரணமாகவும் அகத்தியர் கூறாதனவற்றை யெல்லாம் எழுதி இடைச்செருகல் புரிந்துள்ளமை மிகவும் வெட்கப்படத்தக்க செயலாகும்.

மேலும் இரக்கப்பட்டேன். உண்மையான தொல்காப்பியம் பாழ்படுத்தப் பட்டுள்ளமையைச் சிறிதும் அறியாமல் தாம்தாம் நினைத்தவற்றையெல்லாம் உரையாக எழுதிச் சென்ற இளம் பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலா னோர் தமிழ் நெறியைத் திசைதிருப்பி விட்டுள்ளமையை இந் நூலால் அறிந்துகொண்டமையே அதற்குக் காரணமாகும். பழைய உரையாசிரியர்களாவது, கணிதம் பௌதீகம் முதலாய விஞ்ஞானத்துறைகள் வளராத காலத்தில் வாழ்ந்தவர்கள் வியக்கத்தக்க அளவில் விஞ்ஞானம்வளர்ந்துள்ள இவ் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த - வாழும் தமிழ் கற்ற ஆசிரியர்களான, சுப்பிரமணிய சாத்திரியார், நாவலர் சோமசுந்தரபாரதியார். வேங்கடராயலு ரெட்டியார், அருணாசலம்பிள்ளை, க. வெள்ளை வாரணனார் போன்றோரும் அப்பழைய உரைகளை நம்பி நூல் களை இயற்றிச் சென்றுள்ளமையை நினைக்கும்போது இரக்கப் படாமலிருக்க இயலுமா?

மேலும் பழைய உரைகளையும் பாடங்களையும் நம்பி அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் - பிற கல்லூரிப் பேராசிரியன்மார் பலரும் பலப்பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். இவை ஒருபுறமிருக்க மழவை மகாலிங்க ஐயர், ஆறுமுக நாவலர் வ. உ. சிதம்பரனார் கா. நமச்சிவாய முதலியார், கந்தசாமியார், அழகரடிகள், தேவ

நேயப்பரவாணர் முதலாய பல பெரும் புலவர்கள் தொல்காப்பியத்தைப் பதிப்பித்துள்ளனர். புலவர் பலரைக் குழுவாகக் கூட்டி ஆராய்ந்து பாட பேதங்களோடு மர்ரே & கம்பெனியார் தொல்காப்பியம் முழுதும் பதிப்பித்துள்ளனர். இவர் யாவரும் பாடங்களை ஒரே மாதிரியாகப் பதிப்பித்துள்ளமை இவர்களிடம் ஆராய்ச்சிச் சிந்தனையே சிறிதும் இல்லை போலும் என நினைக்க வேண்டியுள்ளது.

மற்று மகாவித்துவான் ரா. ராகவையங்கார் மு. ராகவையங்கார், அரசஞ்சண்முகனார். மன்னார்குடி சோமசுந்தரம்பிள்ளை வேங்கடசாமிநாட்டார், தேவ நேயப்பாவாணர் அறிவியல் நோக்கில் ஆராய்ந்தவராகக் கருதப்படும் வையாபுரிப்பிள்ளை முதலானோர் தொல்காப்பியத்தைப் பற்றி ஆராய்ந்து கட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டுள்ளனர். அனைவரும் தொல்காப்பியத்தில் பல நூற்பாக்கள் பிரிந்து கிடப்பதையும் பிழைபட்டிருப்பதையும், விடப்பட்டிருப்பதையும் சிறிதும் தெரியாமல் போயினரே என்று எண்ணும் போது பெரிதும் வருத்தமாக உளது.

தமிழைக்காக்கவென்றே தோன்றி இற்றைக்கு முப்பந்தைந்து ஆண்டுகளாகப் பேராராய்ச்சி புரிந்து வரும் தமிழகப் புலவர்குழு இதைப்பற்றி யாதும் கூறாமை - ஆராயாமை பெரிதும் குறைபாடேயாகும் பொறுப்பின்மையுமாகும். ஏன் எனின்? இப்புலவர் குழு உறுப்பினருள் குறிப்பிடத்தக்கவர்களைச் சுட்டி அவர்கள் தொல்காப்பியத்திற்குச் செய்துள்ள கேடுகளைச் சத்திய கங்கை இதழில் திரு. பகீரதன் அவர்கள் அவ்வப்போது எழுதிக் கடனமும் செய்துள்ளார் அதன் பின்னரும் [என்னையும் சேர்த்து] இத்தமிழ்ப் பேராசிரியடத்தும், ஆய்வாளரிடத்தும் எந்த விளைவும் காணப்படவில்லை. இந்நிலைமைகளை நோக்கும் போது சத்திய கங்கை இதழில் "பொதுவாகப் புலவர்கள் வயிற்றுக்காக வாழ்பவர்கள் விலங்கு வாழ்க்கைக்கே முக்கியத்துவம் அளித்தவர்கள், அளித்து வருபவர்கள். அவர்களின் அறியாமையை எண்ணி வருந்துவதைத் தவிர வேறன்ன செய்யமுடியும்" என. திரு. பகீரதன் அவர்கள் எழுதியது பொருத்தந்தானோ என எண்ண வேண்டியுளது.

இங்ஙனம் பொதுவாக்க் கூறினமை மட்டுமின்றிப் பெயர் குறித்துச் சிறப்பாக அவர் கற்றியுள்ளவற்றுள் சிலவற்றையும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

## 1. காவலர் ச. சோமசுந்தர பாரதியார் :

"அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் என்ற மூன்று நூல்கள் எழுதியுள்ளார் இவற்றுள் பல இடங்களில், புலவர்கள் தமிழ் மரபிற்கு மாறாகச் செய்திருக்கும் தவற்றையே செய்திருக்கிறார் [ச. க. இதழ் 1—8—82] இறைச்சி என்னும் உள்ளுறைக்குக் கருப்பொருள் தொடர்பு வேண்டிய தில்லை என்று ச. சோ. பாரதியார் சொல்வது போன்று அறியாமை வேறொன்றுமில்லை" [ச. க. இதழ் 1—9—8 ]

## 2. வ. சுப. மாணிக்கம் :

"சுன் எண்ணத்திற்கு ஏற்பப் பெருந்திணைக்குப் பொருள் கொள்ளவில்லை. இந்தக் குழப்பத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை"

## 3. மு. அருணாசலம்பிள்ளை :

ஐவகை நிலம் என்று அருணாசலம்பிள்ளை எழுதுகிறார். .......... ஆச்சரியமாக இருக்கிறது. காரணம் இவர்கள் எல்லாம் நிலம் வேறு. திணை வேறு என்பதைப் புரிந்து கொள்ளாமல் தவறு செய்கிறார்கள் "

## 4. ச. அகத்தியலிங்கம் :

"தமிழ்மொழியின் பண்புகள் மற்ற மொழிகளைவிடச் சிறப்பான மரபை உடையது ................ இதை அகத்தியலிங்கனார் புரிந்து கொள்ளாமல் இருப்பது அவருடைய பிறமொழிமோகத்தைக் காண்பிக்கிறது. அவருக்குத் தமிழ் மரபும் தெரியவில்லை தமிழ்ப்பண்பும் தெரியவில்லை; இப்படிப்பட்ட பிறமொழி மோகம் கொண்ட பேராசிரியர்களால் தமிழை எப்படி வளர்க்க முடியும்" [ச. க. இதழ் 1—5—82]

## ச. பாலசுந்தரம் :-

தலைப்பு :- "கரந்தைப் புலவரின் உளறல்" ஒலிவரிசை வரலாற்றுப் புலவர் கல்லூரிப்புலவர் பாலசுந்தரம் புரிந்து கொள்ளாததால் இகர உகரங்களைப்பற்றி அவர்மனம்போனபடியெல்லாம் உளறி வைத்திருக்கிறார். அது மட்டுமா? ஒலி அளவில்கூடத் தமிழ் எழுத்தை உச்சரிக்கத் தெரியாத இவர், ஒலிப்பு உயிர்ப்பு முதலிய மொழியியற் சொற்களை வேறு பயன்படுத்தத் துணிந்திருக்கிறார்" [ச. க. இதழ் 15—7—82]

## 5. ஆ. சிவலிங்கனார்

இவர் சார்பெழுத்து என்ற கட்டுரையுள் தொல்காப்பியர் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற மூன்றை மட்டுமே கூறினார் என்கிறார். தொல்காப்பியத்தில் சார்பெழுத்து என்று எங்கும் வரவில்லை - இவற்றைச் சார்பெழுத்து என்று சொல்வது தமிழ் மரபிற்கு முரணானது. மொழி நூல் அடிப்படையிற் பார்த்தாலும் பொருந்தாது. தொல்காப்பியத்தில் இல்லாததைக் கூறியிருக்கிறார்: இவர் பெயருக்குத்தான் ஆசிரியரே ஒழிய பேராசிரியர் அல்ல ........... அவருக்குத் தொல்காப்பியமும் புரியவில்லை, மொழிநூலும் புரியவில்லை இப்படிப்பட்ட பேராசிரியர்களால் தமிழ் வளர முடியுமா? ஏதோ வயிற்றுப் பிழைப்பிற்காகத் தமிழ் தமிழ் என்று சொல்லிவருகிறார்கள் இவர்களில் யாருக்கும் தமிழ்ப்பற்றோ தமிழுணர்வோ இல்லை ........... இவர்களிடம் படிக்கும் மாணவர்களிடம் எப்படி ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் எதிர்பார்க்க முடியும்?'' [ச. க. இதழ் - 1—12—81]

## 6. செ. வை சண்முகம்:

இவர் 'வேற்றுமை பற்றித் தொல்காப்பியர்' என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் தலைப்பே தவறானது வேற்றுமை பற்றித் தொல்காப்பியம் என்று தானிருக்க வேண்டும் காரணம் தொல்காப்பியம் என்ற நூலின் ஆசிரியர் இயற்பெயர் தொல்காப்பியர் அல்ல அகத்தியர் விளிமரபில் விளிப்பெயரின தொடரியல் பண்பு குறித்து ஒரு செய்தியும் காணப்படவில்லை என்கிறார் இதற்கு அடிக்குறிப்பாக - சொல்லதிகாரத்தின் முதல் நான்இயல்கள் தொடரியல் பற்றியன என்ற சுப்பிரமணிய சாத்திரியார் கருத்துப் பொருந்தாது என்றும் அசட்டுத்தனமாகச் சொல்கிறார். இதிலிருந்து சண்முகம் தொல்காப்பியத்தை முறையாகப் படிக்காதவர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை ........... இத்துடன் தொல்காப்பியம் வரலாற்று இலக்கண அடிப்படையில் எழுதப்பட்டதன்று என்று வேறு உளறியிருக்கிறார்.'' [ச. க. கு. 15—12—81]

இங்ஙனம், குமாரசாமிராஜா, ரா சீனிவாசன், கு.சுந்தரமூர்த்தி முதலானோரையும் வீரமாமுனிவர், ஜி யு போப் முதலானோரையும் மிக உறைப்பாகச் சாடுகிறார் மேலும் ''தமிழ்மொழி உலக மொழிகளுக்கு இணையாக ஓங்க வேண்டு

30470

மானால் தமிழ்ப்புலவர்களிடமிருந்து தமிழ்மொழியை மீட்க வேண்டும்'' [ச. க. இ. 15-4-81] என்றும் இயம்பியுள்ளார்.

இவர்கள் இங்ஙனம் இடித்துரைத்தும் பயன்படாமை நோக்கி இவர்கள் கேளார், திருந்தார் இனி வருங்கால அறிவுலகமாவது உண்மை தெரிந்து தொல்காப்பியத்தைப் பயில வேண்டுமென்ற பெருங்கருணைத் திறத்தால் இந்நூலை வெளியிட்டுள்ளார்கள்

1 நன்னூல் முதலிய இடைக்கால நூல்கள் பற்றிய இவர்களின் கருத்துவருமாறு "நன்னூல் சமணநூல். சமணத்துக்கு இறை நம்பிக்கைகிடையாது நன்னூலைத் துணைக்கொண்டுதமிழ் படித்தவர்கள் பெரும்பாலும் இறை நம்பிக்கை அற்றவர்களாகவே இருக்கிறார்கள். ஒழுக்கக் குறைபாடுடையவர்களாகவும் இருக்கிறார்கள் தமிழுக்குப் புறம்பானவர்களாகவும் வாழ்கிறார்கள். தமிழைத் திரித்துக் கெடுத்திருப்பவர்களைத் தமிழ் அறிஞர்கள் என்று மௌடீகமாக நம்புகிறார்கள்''[சத்-க இதழ் 1-12-81]

ஆய்வாளர் இங்ஙனங்கூறுதலான், ''பூமலியசோகின்புனை நிழலமர்ந்த நான் முகற்றொழுது நன்கியம்புவனெழுந்தே' முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லே'' எனக் கடவுள் வணக்கங்கூறும செய்யுட்கள் இடைச்செருகல் என்பது இவர்தம் கருத்தாகத் தெரிகிறது

2) அறிவிற்சிறந்த திருவள்ளுவர்கூட தொல்காப்பியத்தைப் பின்பற்றாமல் பன்னிருபடலம் போன்ற இலக்கணத்தைப் பின்பற்றியிருக்கிறார். ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாய தூஉம் மழை'' இதைத் திருவள்ளுவர் பாடியிருக்க முடியாது இது பிற்காலப் புலவர்களின் கைவரிசை [ச க இ. 1-10-80] இவர்தம் நுட்பமான இவ்வாய்வுரையால் 'திருக்குறள்' பன்னிருபடலம், நம்பியகப்பொருள் விளக்கம், யாப்பருங்கலம் முதலியவற்றிற்குப் பிற்பட்டது என்பதை நயமாகப் புலப்படுத்துகின்றனர்.

இனி ''இப்பொழுது வழக்கிலிருக்கும் தொல்காப்பியம் முழுதும் பிழையாக அச்சிடப்பட்டுள்ளது. ஏராளமான தவறுகள் இருக்கின்றன அத்தவறுகளைத் திருத்தி அச்சிடவேண்டும் இது

தமிழ் மொழி வளர்ச்சிக்குச் செய்யும் பெரிய சேவையாகும்.'' [சத் க இ 1-12-80] என்றும் எழுதியுள்ளார்.

இதுகாறும் அச்சேவையை எவரும் செய்யாது விட்டனர். இவ்வேண்டுகோளை அவர் விடுத்து இற்றைக்குப் பதின்மூன்று ஆண்டுகளாகின்றன. எனவே அதற்குரிய அறிவாற்றலும் இலக்கணச் சிந்தனையும் எவரிடத்தும் இல்லை என்பதனை இத்துணை நாள் பொறுத்துப் பார்த்தபின் அறிந்து திருவாளர் மு. இராமலிங்கம் அவர்கள் துணையுடன் இற்றைக்கு இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். இது தமிழறிஞர்கள், ஆசிரியர்கள் என்று சொல்லிக் கொள்வோர் எல்லோராலும் பாராட்டப் படவேண்டிய அரியதொரு சேவையாகும்.

வழக்கிலுள்ள தொல்காப்பியப் புத்தகங்களிற் காணப்படும் தவறுகள் மாற்றங்கள் யாவும் அச்சிட்டோரால் நிகழ்ந்தனவாகக் குறிப்பிட்டுள்ளமையோடு இந்நூலுள்ளும் அதனை வலியுறுத்தி யுள்ளனர். மேலும் ''நூல் மரபின் சில செய்யுட்களை இலக்கண வரம்பைக்கூடப் பார்க்காமல் பிரித்தும் சேர்த்தும் தவறாக அச்சிட்டுள்ளார்கள் (இந்நூல் - பக் 17) எழுத்துப்படலத்துள் இருக்கும் ஒன்பது இயல்களில்உள்ள பெரும்பாலான செய்யுட்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. காரணம் பிற்கால இலக்கணங் களைக் கற்றவர்கள் தொல்காப்பிய நூலைப் பதிப்பித்திருப்பதால் ஏற்பட்ட தவறுதான் (பக்-718) செய்யுளியலின் செய்யுள்கள் துண்டு துண்டாக அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.'' என்று கூறி யுள்ளனர். இப்பெருமக்களின் ஆய்வுரைப்படி ஏறத்தாழ 1200 ஆண்டுகட்கு முன்னரே அச்சிட்ட தொல்காப்பியம் வழக்கிலிருந்த தாகத் தெரிகிறது. தொல்காப்பியத்திற்கு உரை செய்தவர்களுள் இற்றைக்குக் கிடைத்துள்ள சான்றுகளின்படி உரையாசிரியர் என்னும் இளம்பூரணர் முற்பட்டவர் அவர் உரையாக வழிவழி வந்த ஓலைச்சுவடிகளில் அவ்வாறே நூற்பாக்கள் உள்ளன. ஒரு நூற்பாவின் உரையைக் கூறுமுன் 'இந்நூற்பா என்னுத லிற்றோ எனின்' என்றதொரு வினாவை எழுப்பிக் கருத்துரை கூறியதற்குப் பின்னர்த்தான் பதவுரையோ, பொழிப்புரையோ கூறியுள்ளனர். அவர் கூறியுள்ள முறையிலேயே சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதல் பி. சா சுப்பிரமணிய சாத்திரியார் நாவலர் சோமசுந்தரபாரதியார் வரை நூற்பாக்களை அமைத் துள்ளனர்.

மேலும் மழவை மகாலிங்கையர், ஆறுமுக நாவலர், கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம்பிள்ளை, கா. நமசிவாய முதலியார், சி. வை. தாமோதரம்பிள்ளை முதலானோர் தம் பதிப்புரையில் பல ஓலைச் சுவடிகளைப் படித்து ஒப்பிட்டுப் பார்த்து அச்சிட்டுள்ளதாகக் கூறுகின்றனர். சில பாட பேதங்களும் குறித்துள்ளனர். எனவே இப்பொழுது அச்சிட்டுள்ளவர்களால் இத்தவறுகள் நேர்ந்திரா என்பதில் ஐயமில்லை. மற்று இவ்விந ஆராய்ச்சியாளர்களை ஒப்பப் பேரறிவும், ஆழ்ந்த நோக்கும் முக்கால உணர்வும் பரந்த நூற்பயிற்சியும் அவர்களுக்கு வாயாதிருக்கலாம் எனினும் அவர்களைப் பைத்தியக்காரர்கள் அறிவிலிகள் பித்தலாட்டக்காரர்கள் என்று கருத என் மனம் இடந்தரவில்லை.

மேலும் இந்நூல் பக்கம் 16இல் – "இந்தச் செய்யுள் முழுமை பெறவில்லை எனவே இரண்டு செய்யுளடிகளை வருவித்துச் சேர்த்திருக்கிறோம்" பக்கம் 28இல், "என்ற நான்கு அடிகளை வருவித்துச் சேர்த்திருக்கிறோம் ......... இப்பொழுதுதான் எழுத்தைப்பற்றிக் கூறும் இலக்கணம் சரியாக அமைந்திருக்கிறது" இவ்வாறு நூல் முழுதும் பெரும்பாலான நூற்பாக்களில் சில பல அடிகளைப் புனைந்து சேர்த்திருக்கின்றனர். மேலும் பக் 67 இல் – மொழி மரபின் கடைசிச் செய்யுள் காணப்படவில்லை அது புணரியல் முதற் செய்யுளாக இருக்கிறது அந்தச் செய்யுளை மொழிமரபின் கடைசி தொகுப்புச் செய்யுளாகச் சேர்த்திருக்கிறோம்" எனப்பல இடங்களில் மாற்றிச் சேர்த்துள்ளமை பற்றிக் கூறுகின்றனர் மற்றும் பக்கம் 728இல் [செய்யுளியல் முதல் நூற்பா]" அடுத்த பத்தாவது அடியில் ஆறுதலையிட்ட அம்மூவேழும் என்று இருந்ததை ஆறு தலையிட்ட அந்நாலைந்தும் என மாற்றப்பட்டிருக்கிறது" என்றும் பக்கம் 22-இல் - "தொல்காப்பியம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்தித்துச் செம்மைப்படுத்திப் பதிப்பித்திருக்கிறோம். தொல்காப்பியச் செய்யுளின் தவறான வைப்பு முறைகளை மாற்றிச் செம்மைப்படுத்தியிருக்கிறோம்" என்றும் பக்கம் 109இல் புணரியல் என்றால் என்ன என்று விளக்கும் 'புணரியலின் முதற்செய்யுள் காணப்படவில்லை அந்தச் செய்யுளின் ஒரு பகுதி மட்டும் புணரியலில் 39 40ஆவது செய்யுட்களாக இரண்டு செய்யுட்களாக இருக்கிறது. அந்தச் செய்யுளின் முழுவடிவத்தையும் தொல்காப்பிய இயல்களின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு புணரியலின் முதற்செய்யுளை உருவாக்கியிருக்கிறோம்" பக் 719இல் சில செய்யுட்களில் இருந்திருக்க வேண்டிய அவற்றின் பகுதிகள்

காணப்படவில்லை. சில செய்யுள்கள் அவை இருக்கவேண்டிய இடத்தில் இல்லாமல் மாறிக்கிடக்கின்றன பக் 137 இல் பல தொல்காப்பிய இயல்களில் தொகுப்புச் செய்யுள்கள் விடுபட்டிருக்கின்றன,'' எனப்பெரும்பாலான இடங்களில் வரைந்துள்ளனர் எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறேன்.

''அகர அகரம் ஆகாரமாகும்
இகர இகரம் ஈகாரமாகும்
உகர உகரம் ஊகாரமாகும்
இகர அகரம் ஏகாரமாகும்
உகர அகரம் ஓகாரமாகும்

இந்தச் செய்யுட்களைத் தொல்காப்பியச் சுவடிகளிலிருந்து எடுத்து விட்டிருக்கிறார்கள். இதைப் பற்றித் தமிழ்ப் புலவர்கள் ஆய்ந்ததாகவோ, சிந்தித்ததாகவோ தெரியவில்லை காரணம் தமிழ்மீது அக்கறையும், அதை உலக மொழிகளுக்கு இணையாக ஆற்றலுடன் வளர்ப்பதில் ஆர்வமும் உள்ள தமிழ்ச் சான்றோர்கள் தமிழ் நாட்டில் இப்பொழுது அருகிவிட்டார்கள். தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களோ தங்கள் அயல்மொழி அடிமை உணர்விலிருந்து இன்னும் விடுபடவில்லை அவை ஆங்கில மொழியை வளர்ப்பதற்காகவே ஏற்பட்ட பழைய அடிமைப் பல்கலைக்கழகங்களாகவே இன்றும் செயல்பட்டு வருகின்றன'' [ச. க. இ. 15-11-80]

மேலே கூறியவற்றை யான் கண்ணுற்றபோது பேராச்சரியமும், பெருமலைப்பும் கொண்டேன். ஆம் பத்துப் பேரறிஞர்கள் கூடிப் பல்லாண்டுகள் ஆராய்ந்திடினும் முழுதும் காணமுடியாத அரிய உண்மைகளைக்கண்டு உணர்த்தியதோடு மட்டுமன்றி அவற்றைத் தக்கதொரு நிலைய வாயிலாக வெளிப்படுத்தியுள்ளமை தமிழகம் நினைத்துப் போற்ற வேண்டியதொன்றாகும்.

இவர்தம் இவ்வாராய்ச்சி முடிவுகளை நோக்கும்போது சில ஐயங்களும் தோன்றின. இத்தகைய பெருங்கேடுகளைச் செய்தவர்கள் இப்பொழுதுள்ள தொல்காப்பியத்தை அச்சிட்டவர்களாக இருப்பதற்கியலாது. ஏன் எனின் அவர்கள் எல்லோரும் ஏட்டுச் சுவடிகளைப் பார்த்தே அச்சிட்டுள்ளதாகக் கூறியுள்ளனர். ஏடெழுதினோர் சில பல சொற்களைப் பிழையாக எழுதி

இருக்கலாம் சில அடிகளை விட்டிருக்கலாம் அத்தவறுகள் சுவடி நூல்களை வைத்துப் பாடஞ் சொன்னவர்களால் திருத்தம் பெற்றிருக்கும் அவர்கள் பிழையைத் திருத்திப் பாடஞ்சொல்ல வில்லை என்றால் அவர்கள் ஆசிரியர் பணிக்குத் தகுதியற்றவர் களாவர். இருப்பதைப் படிக்கும் கிளிப்பிள்ளைகளாவர்

மற்று உரையாசிரியர்கள் இக்கொடுமைகளைச் செய்திருப் பார்களா என்றால் அப்படிச் சொல்ல இயலவில்லை. சிவஞான முனிவர் போன்றோர் அப்படியே பயின்று தங்கள் கருத்துக் களைச் சொல்லியுள்ளனர். உரையாசிரியர்கள் சொன்ன உரை களில் தவறு இது, இதுதான் நேரிது. என்றுதான் வரைந் துள்ளார்கள், ஆயிரத்தில் இரண்டொரு சொற்களுக்கு மட்டுமே திருத்தங் கூறியுள்ளனர் இயல்களை மாற்றியும், நூற்பாக்களை இடம் மாற்றியும் அடிகளைச் சிதைத்தும் கூட்டியும் குறைத்தும் அவர்கள் செய்திருப்பார்கள் என்று சொல்வதற்குச் சான்றுகள் இல்லை. தெய்வச் சிலையார் இரண்டொரு நூற்பாக்களை மட்டுமே இடம் மாற்றியுள்ளார் அவர் உரை செய்தது சொற் படலத்திற்கு மட்டுமேயாகும்

எனவே இளம்பூரணர் உரை செய்ததற்குப் பல்லாண்டுகளின் முன்பேயே இக்குற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும், காரணம் நக்கீரர் செய்த இறையனார்களவியலுரையுள்ளும், வீர சோழிய உரையுள்ளும், யாப்பருங்கல விருத்தியுரையுள்ளும் தொல்காப்பிய நூற்பாக்கள் பல மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன, நேமிநாத உரையுள் பிறப்பியல் நூற்பாக்கள் முழுதும் தரப்பட்டுள்ளன அவை யாவும் இப்பொழுது வழங்கும் தொல்காப்பிய அமைப் பினின்று வேறுபடவில்லை; இவ்வாறு ஓர் அரும்பெரும் நூலைப் புண்ணாக்கிக் குற்றுயிராகச் செய்த சண்டாளர்கள் யாவர் என்பதை அறியமுடியவில்லை இவ்வளவு தீர்க்கதரிசனத்தோடும் மெய்ஞ்ஞான உணர்வோடும் உண்மையான பாடங்களையும் அமைப்பினையும் தேர்ந்து செம்மை செய்துள்ள ஆய்வாளர்களும் அப்பகைவர்களை இனங்கண்டு கூறாமல் பதிப்பித்தவர்களின் தவறு என்ற அளவில் கூறிமுடித்துவிட்டனர்.

மேலும் அவ்வவ் இயல்களின் தொடக்கத்தில் "அவ்வத் தலைப்பிற்குரிய பொருள்களுக்கு வரைவிலக்கணம் இல்லை, இறுதியில் தொகுப்புச் செய்யுள் இல்லை எனப் பல இயல்களுக்கு சில பல அடிகளை உருவாக்கிச் சேர்த்திருக்கிறோம்" என்று கூறுகின்றனர் அப்படியாயின் பல இயல்களுக்கு அகத்தியர்

வரைவிலக்கணமும் தொகுப்புச் செய்யுளும் இயற்றி அளிக்க வில்லை என்றாகிறது. இன்றேல் அவர் எழுதியிருந்த அந்நூற் பாக்கள் மறைக்கப்பட்டுவிட்டன அல்லது மறைந்துவிட்டன என்றுதான் கொள்ளவேண்டும் முக்காலமும் உணர்ந்த அகத்தியர் மேல் குறை காண்பது அடாத செயலாகும். அதனால் இவ்ஆய்வாளர்கள் புனைந்து கூட்டிய அடிகளுக்கும் அகத்தியர் எழுதிய அடிகளுக்கும் நன்கு வேறுபாடு தெரியவேண்டும் என்ற உணர்வோடு அவ்வந்நூற்பாவோடு ஒட்டாமல் இக்கால நடையோடு பொருந்துமாறு செய்திருக்கிறார்கள். இது இவர்கள் அகத்தியரிடத்துக் கொண்டுள்ள மதிப்பையும் இவர்தம் பெருந் தன்மையையும் காட்டுகிறது.

மேலும் "ஒரு நூலாசிரியர் இயற்றிய நூலில் இவை இவை இருந்திருக்கவேண்டும், இவைஇவை மறைந்துவிட்டன அல்லது மறைத்துவிட்டனர் என்று காரணத்தோடும், சான்றுகளோடும் சுட்டிக்காட்டுவதுதான் ஆய்வாளர்களின் கடமை, பொறுப்பு, அவ்வாறன்றித் தாமே அடிகளையும் செய்யுட்களையும் புனைந்து நூலாசிரியர் பாடங்களோடு சேர்த்துப் புதியனவாகப் படைப்பது ஆய்வறமாகாது அப்படிச் செய்யின் ஒவ்வொரு வரும் தாங்கள் கொள்ளும் முடிவிற்கேற்பத் திருத்தியமைக்க முற்படுவர். பின்பு மூலநூலே வடிவொழிந்து போகும்" என்று அறிஞர்கள் கூறுவர். இவ்வாராய்ச்சி அறம் சாதாரண ஆய்வாளருக்குப் பொருந்துமே தவிர நூலாசிரியரை ஒத்த ஞான மும், அறிவாற்றலும் தீர்க்க தரிசனமும் உடைய அசாதாரண இவ்ஆய்வாளர்களுக்குப் பொருந்தாது என்பதற்கு இதனை இராமலிங்கர் பணிமன்றமே ஏற்றுப் பதிப்பித்துள்ளமையும், பாரதிதாசன் பல்கலைக்கழகம் கருத்தரங்கம் நிகழ்த்துவதும் சான்றுகளாகும்

இனி வடமொழி என்னும் சமஸ்கிருதம் தோன்றுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஆண்ட பாண்டியன் ஆதிசிவனின் முதலாம் சங்கத்து முதல் தலைவராக இருந்த ஆசிரியர் அகத்தியர் எழுதியருளிய தொல்காப்பியத்துட்புகுந்து அதனைச் சிதைத்தும் அழித்தும் மாற்றியும் தமிழ் நெறியை மாசுபடுத்திய அப்பாதகர்கள் அவ்வளவில் நில்லாமல் தமிழர் ஒழுக்கத்திற்கும் மொழிக்கும் கேடுதரும் கருத்துக்களை அகத்தியர் செய்யுளைப் போலவே செய்து இடை இடையே செருகி இருக்கிறார்கள் இதனைக் காணும்பொழுது குருதிக் கண்ணீர் பெருக்கெடுக்கிறது

இதனை 1–12–81 ' சத்திய கங்கையில், "இன்றைக்கு வழக்கில் உள்ள தொல்காப்பியத்தில் பல இடைச்செருகல் சமயவாதிகளும் தமிழ்மரபு தெரியாதவர்களும் செய்திருக்கும் திருவிளையாடல்கள். இவற்றை நீக்கிட வேண்டும்" என்று எழுதிய வண்ணம் இந்நூலிலும் அதனை விதந்து கூறிச் சொற் படலத்துள் இலக்கியச் சொற்களின் இலக்கணங்கூறும் ஆறு நூற்பாக்களையும் அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் என்னும் நாற்பாலாருக்குரிய அடையாள மரபு கூறும் நூற்பாக் களையும் இலக்கணநூல் இயற்றுதற்குரிய மரபு பற்றிய சூத்திரம், ஒத்து, படலம், பத்துவகைச் சிதைவு, பத்துவகை அழகு முப்பத்திரண்டு வகை உத்தி ஆகியவற்றின் மரபிலக்கணங் கூறும் முப்பத்து மூன்று நூற்பாக்களையும் நீக்கித் தொல்காப்பி யத்தைத் தூய்மைப்படுத்தியுள்ளனர். இடையேயும் சிலவற்றை நீக்கியுள்ளனர் அவ்வாற்றான் கூறியது கூறல், மிகைபடக் கூறல் மயங்கக்கூறல், தன்னான் ஒரு பொருள் கருதிக்கூறல் முதலியவற்றைச் சிதைவுகள் என்றெண்ணி உரையாசிரியன்மார் கூறியவற்றை இவர்கள் ஏற்காமல் அவற்றை விளக்கம் எனக் கொண்டு விளக்கிச் சேர்த்துள்ளார்கள் எனத் தெரிகிறது

மேலும் நுதலியறிதல், வாராததனான் வந்தது முடித்தல் வந்தது கொண்டு வாராதன உணர்த்தல், முறைபிறழாமை, முடித்துக்காட்டல், பல்பொருட்கேற்பின் நல்லது கோடல், சொல்லின் எச்சம் சொல்லியாங்குணர்த்தல் தந்து புணர்ந் துரைத்தல் உய்த்துக்கொண்டுணர்தல் முதலிய உத்தி பற்றி உரையிற்கோடலான் உரையாசிரியன்மார் கூறியவற்றை எல்லாம் இவர்கள் உடன்படாமல் யாவற்றையும் நூற்பாவா லேயே விளக்கிச் சொல்ல வேண்டுமென்ற உண்மையை மதித்து வரை இலக்கணம், தொகுப்பிலக்கணம் முதலாயவற்றைப் புனைந்து உருவாக்கியும், வரவழைத்தும் எடுத்துச் சேர்த்தும் செப்பம் செய்துள்ளார்கள். இவ்வாறு செய்வதற்குத் தமிழ் தமிழ் என்று வயிற்றுப் பிழைப்பிற்காகக் கூறும் தமிழ்ப் புலவர்க்கு முடியாது, இதற்கு அசகாய சூரத்தனம் என்னும் பெருவீரம் வேண்டும் அவ்வீரம் அவதார புருஷர்களுக்கு மட்டுமே வாய்க்கும் இவ்ஆராய்ச்சியாளர்கட்கு அவ்வகைத் துணிச்சல் வாய்த்தமை அவர்தம் பூர்வ புண்ணியம் அல்லது தமிழ் செய்ததவம் எனலாம்.

இடைச்செருகல் எனக்கண்டு அவற்றை நீக்கியதற்கு அசைக்க முடியாத காரணங்களாக இவர்கள் கூறுவன வருமாறு

''அகத்தியரால் எழுதப்பட்ட தொல்காப்பியம் இற்றைக்குக் பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. அதற்கு இரண்டாயிரம் ஆண்டுகட்குப்பின் தமிழர்களால் உருவாக்கப்பட்டது வடல் (வடு + அல் + மொழி = வடல்மொழி) மொழி என்னும் சமஸ்கிருதம் அப்பழந்தமிழ் மக்களால் சமஸ்கிருதத்தில் முதன் முதல் எழுதப் பட்டது ரிக்வேதம். [சத். க. இதழ் 1—8—82] தொல்காப்பி யத்தை வைத்துக் கொண்டுதான் வடல்மொழியை உருவாக் கினுர்கள்''. [ச. க. இதழ் 1 - 12 - 82] ஆதலால் சமஸ்கிருத மொழி உண்டாவதற்கு முன்பே எழுதப்பட்ட தொல்காப்பியத்தில் வடமொழியாக்கம் பற்றிக் கூறுதற்கு வழியேது ?

அவ்வாறே நாற்பால் வருணக் கோட்பாடுகள் மனுநீதி நூலுக்குப் பின் தோன்றியவை. உத்திகள் அர்த்த சாத்திரத்தி னின்று மொழிபெயர்க்கப்பட்டவை. எனவே இவை இடைச் செருகல் என்பதில் ஐயமில்லை எனச் சாதித்துள்ளனர். தொல் காப்பியத்தில் வரும் சாதி என்ற சொல் வேறு, வடமொழியில் உள்ள ஜாதி என்பது வேறு. முன்னது சாதித்தல் என்ற வினைப்பெயரின் முதல்நிலையாகும் என்பது இவர்கள் தந்துள்ள அரிய விளக்கம். மற்று தொல்காப்பியச் சூத்திரங்களை, நூற்பா என்று கூறுவது தவறு நூற்செய்யுள் என்றுதான் கூற வேண்டுமென்று வலியுறுத்தி [ச. இ. 15 - 1 - 82] அவ்வாறே இந்நூல் முழுதும் வழங்கியுள்ளனர்

இனி, ஆசிரியர் பெயர், நூலின் காலம் ஆகியவவை பற்றிய இவர்களின் ஆராய்ச்சி முடிவுகளைக் காண்போம்.

''தொல்காப்பியத்தை இயற்றிய ஆசிரியரின் பெயர் தொல் காப்பியர் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். இது அவர் தொல்காப்பிய நூலை இயற்றிய அடிப்படையில் அவருக்குக் கிடைத்திருக்கும் சிறப்புப் பெயர். நன்னூல் உரையிற் கண்ட சான்றின்படி தொல்காப்பிய ஆசிரியருடைய இயற்பெயர் அகத்தியர் என்பதையும் தெரிந்துகொள்ள முடிகிறது'' என இந்நூல் பக்கம் 23, 24லும் பிற இடங்களிலும் கூறுகின்றனர். இவர்களைத் தவிர வேறு யாரும் இவ்வுண்மையை இதுவரை கண்டு கூறவில்லை.

இந்நூலை வெளியிட்டுள்ள பணிமன்றம் யாருடைய பெயரைத் தாங்கியுள்ளதோ அவ்வள்ளலார் தாம் எழுதிய தொண்டைமண்டலம் பற்றிய ஆராய்ச்சியுரையுள் பல இடங்

களில் தொல்காப்பியச் சூத்திரங்களை மேற்கோள் காட்டுமிடத்தெல்லாம் அந்நூலாசிரியரைத் தொல்காப்பியர் என்றே குறிக்கிறார். அவ்வருளாளருக்கும் இவ்வுண்மை தெரியாது போனது வியப்பாக உள்ளது. ஆறுமுகநாவலர், சிவஞான முனிவர், ரா ராகவையங்கார், உ.வே. சாமிநாதையர், வையாபுரிப்பிள்ளை போன்றவர்க்குத் தெரியாமற்போனதில் வியப்பில்லை. அவர்கள் சாதாரண மனிதர்கள், அருட்பிரகாச வள்ளலாருக்குத் தெரியாமற்போனதே பெருவியப்பிற்கு உரியதாகும்.

காலம் :- ''தொல்காப்பியம் பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றியிருக்க வேண்டும் என்பதை இந்நூலின் முன்னுரையில் விரிவாகச் சொல்லியிருக்கிறோம்'' என இந்நூல் 21-ஆம் பக்கத்தில் உள்ளது. ஆனால் இந்நூலில் முன்னுரை சேர்க்கப்படாமையான் சத்திய கங்கையில், ஆய்வாளர் திரு. பகீரதன் அவர்கள் எழுதியுள்ளவற்றை இங்கே குறிப்பிடுகிறேன்.

''தொல்காப்பியம் 10656 ஆண்டுகட்கு முன் தோன்றியது, இதை உலகில் உள்ள எந்த மொழி வரலாற்றாசிரியரும் மறுக்க முடியாது.'' இதற்கு அவர் காட்டியுள்ள ஒப்பற்ற சான்று,

''ஆதிசிவன் பெற்றுவிட்டான் — என்னை
ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே — நிறை
மேவும் இலக்கணம் செய்துகொடுத்தான்'' (பாரதி)

என்பதாகும், சக்திதாசன் சுப்பிரமணிய பாரதியார் அமரகவியாதலின் அவர் வாக்கினில் சத்தியத்தைத் தவிர வேறொன்றும் தோன்றாது, மற்று ஆதிசிவன், ஆரியன், வேதியன் என்று புராணம் போல் அமைந்துள்ளதே என அறியாதவர் சிலர் ஐயுறலாம் என்பதை எண்ணி அவ் ஐயம் நீங்க இவ் அறிவார்ந்த ஆய்வாளர் அவற்றைப் பற்றிப் பின்வரும் விளக்கத்தை அருளியுள்ளார். ''ஆதிசிவன்'' (சிவபெருமானல்லன்) குமரி நாட்டை ஆண்ட முதல் பாண்டிய மன்னன், முதல் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவன் அதன் தலைவர் அகத்தியர், ஆரியன் என்றால் அறிவாளிகளாகிய சான்றோர் வழியில் வந்தவன் என்பது பொருள், வேதியன் என்றால் வேதித்தற் கலையிற் சிறந்தவன் என்பது பொருள் [ச. க. இ. 15—6-80] செயமா கீர்த்தி என்று புகழ்பெற்ற பாண்டியன் சிவன் [ச.க.இ 1-11-80] மிகச் சிறந்த அறிவரான யோகியரான அகத்தியர் தூய தமிழர்

இக்காலத்து மொழியிற் சொல்ல வேண்டுமானால் அகத்தியர் ஒரு பச்சைத் தமிழர்'' இங்ஙனம் அற்புதமான பொருள் காண எந்தப் புலவருக்கு முடியும்? இவ்விளக்கத்தைக் கேட்ட பின்பும் ஐயப்படுவோர் மிகவும் மௌடீகர் ஆவர்,

தொல்காப்பியர் காலத்தை வரலாற்று முறைப்படி ஆராயத் தெரியாத ரா. ராகவையங்கார், மு. வரதராசனார், இராச மாணிக்கம் பிள்ளை, சி இலக்குவனார், தேவநேயப்பாவாணர், க. வெள்ளைவாரணனார் போன்றோர் கி மு எழுநூறைத் தாண்டவே இல்லை. வையாபுரிப்பிள்ளை கி. பி. நானூறு என்பர். இவ்விடத்தில் வரலாற்றாசிரியர்கட்கு ஒரு ஐயம் எழலாம். ஹரப்பா. முகஞ்சதாரோ நாகரிகமே நாலாயிரம் ஆண்டுகட்கு உட்பட்டதுதானே என்று சிலர் நினைக்கலாம். ஆதிசிவனும், அகத்தியரும் வாழ்ந்ததும், தலைச்சங்கமிருந்ததும் கடல்கொள்ளப்பட்ட குமரிக் கண்டத்தில் என இவ்வாய்வாளர் கூறியுள்ளதை உணர்ந்தால் அவ்வையமும் நினைவும் தவறு என்பது புலப்படும்.

இனி, நூற்பாக்களுக்குப் பெரும்பான்மையும் பதவுரை பொழிப்புரை என்னும் பழைய மரபினை ஒழித்துச் சிறப்புரை யோடு கூடிய கருத்துரைகளே கூறப்பட்டுள்ளன. சொற்களுக் குரிய அகராதிப் பொருள்வழியும், பழைய உரையாசிரியர்களை நம்பியும் படித்த எனக்குப் பல நூற்பாக்களின் பொருள் விளங்க வில்லை. சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டுக்கள் தந்திருந்தால் ஓரளவு பொருட்படலத்தின் செய்திகள் புரிந் திருக்கும் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பெருங்கதை முத்தொள்ளாயிரம், திணைமாலை நூற்றைம்பது முதலிய வற்றிலிருந்தாவது காட்டியிருக்கலாம் இல்லை. வள்ளலா ன் அருட்பாவிலிருந்தும், பாரதியாரின் பாடல்களிலிருந்தும் சில எடுத்துக்காட்டுக்கள் தரப்பட்டுள்ளன. [பக்கம் 816, 825, 831– பாரதி பக் 722, 786, 817, 836, 838 839] எனக்கு விளங்காத வற்றுள் சிலவற்றைச் சுருக்கமாக இங்கே குறிப்பிடுகிறேன்

பெயரியல். 8 ''நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலு முரித்தே
அன்ன மரபின் வினைவயினான'' இதன்

விளக்கம், நிகழ்காலத்தில் வரும் பெயர்களில் பலர்பாலில்லாத மற்ற பெயர்களின் திணையை எப்படித் தெரிந்து கொள்வது? உயர்திணைச் சொற்களுக்கு அதற்கு ஏற்ற வினைச்சொல்லைச்

சேர்த்துத் தெரிந்து கொள்ளலாம். அல்திணைச் சொற்களுக்கு அதற்கேற்ற வினைச்சொல்லைச் சேர்த்துத் தெரிந்துகொள்ளலாம் என்பதாகும்.

எ-டு :- 'சாத்தன் யாழ் வாசிப்பான்' என்று சொல்லும்பொழுது யாழ் வாசிப்பது உயர்திணைக்கே உரிய தொழில் ஆதலின் சாத்தன் என்ற சொல் உயர்திணையைக் குறிக்கிறது என்பதாகும்.

இவற்றுள் நிகழ்காலத்தில் வரும் பெயர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அப்படிச் சில பெயர்கள் உண்டா? மற்று வாசிப்பான் என்னும் வினைமுற்றே உயர்திணையைக் காட்டாதா? யாழ் வாசித்ததனால் தான் உயர்திணையைக் காட்டுகிறதா? புரியவில்லை. அடுத்து

அகத்திணையியல் 3 கைக்கிளையும் பெருந்திணையும்

1 "காமஞ்சாலா இளமையோள் வயின்
2 ஏமஞ்சாலா இடும்பை எய்தி
3 நன்மையும் தீமையும் என்றிருதிறத்தான்
4 தன்னொடும் அவளொடும் தருக்கியபுணர்ந்து
5 சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின்புறல்
6 புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே
7 ஏறிய மடல்திறம் இளமைதீர்திறம்
8 தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
9 மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
10 செப்பிய நான்கும் பெருந்திணைக்குறிப்பே
11 முன்னைய நான்கும் முன்னதற்கென்ப"

வழக்கில் உள்ள தொல்காப்பியத்துள் இவ்வடிகள் மூன்று நூற்பாக்களாக உள. இவற்றை ஒரே செய்யுளாக அமைத்திருக்கிறார்கள் இவர்கள். இனி இதற்குப் பொருளாக அவர் குறித்திருப்பதைக் காணுங்கள்.

1, 2: ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கிறான், அவளும் அவனை விரும்புகிறாள் என்றாலும் அவனைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வதற்குள் தன் விருப்பத்தை அவள் அவனிடம் தெரிவிக்கக் காலந்தாழ்த்துகிறாள்,

3, 4, 5 அவனோ தனக்கும் அவளுக்கும் ஏற்பட்ட தொடர்புகளையும் அவற்றால் உருவாகும் நன்மை தீமைகளையும் பற்றி அவளிடம் பேசுகிறான். ஆனால் அவளிடமிருந்து எந்தப் பதிலையும் அவன் எதிர்பார்க்கவில்லை. தன் மன உணர்வையும் நிலையையும் அவள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே பேசுகிறான். இதில் அவனுக்கு இன்பம் ஏற்படுகிறது.

6. அவளுடைய பெண்மையின் தன்மை அவளை உடனுக்குடன் தன் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு விடுவதில்லை

[இவை யாதோ ஒரு நாவலைப் படிப்பது போல உள்ளதாகக் கருதா தீர்கள் இவையே முதல் ஆறடிகட்கும் உரிய பொருள். இனி அடுத்த ஐந்தடிக்கும் பொருள் கூறுவதற்குமுன் அவற்றை இவற்றுடன் இயைபு படுத்துகிறார், அது வருமாறு]

கைக்கிளை ஒழுக்கம் முதிர்ந்த பிறகு காதலர்கள் குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளுகிறார்கள், இந்த வாழ்க்கையும் நிறைவேறுகிறது, பிறகு இவர்கள் பொதுமக்கள் நலனுக்காகவும் உயிர்க்குலத்துக்குப் பணி செய்வதற்காகவும் தங்கள் குடும்பப் பொறுப்புக்களையெல்லாம் பிள்ளைகளிடம் கொடுத்து விட்டுச் சுதந்திரப் பறவைகளாகி விடுகின்றனர், [குடும்ப வாழ்க்கை சுதந்திரமற்றது என்பது இதனான் உணர்த்தப் பட்டுள்ளது] பொதுநல வாழ்க்கையில் ஈடுபடுகின்றனர்.

7 அப்போது மற்றவர்கள் வாழ்க்கைக்காக, சத்தியத்தை நிலைப்படுத்துவதற்காக நீதிமன்றம் ஏறி வழக்காடுகிறார்கள். இதையே 'ஏறிய மடற்றிறம்' என்ற செய்யுளடி விளக்குகிறது திறம் என்ற சொல் அனுபவத்தினால் ஏற்படும் திறமையைக் குறிப்பிடுகிறது (ஏழாவதடி பிற்பாதி) தங்கள் குடும்ப வாழ்க்கையில் ஆரம்ப காலத்தில் இளமையின் துடிப்பாலும் அனுபவக் குறைவாலும் செய்த குறைகளைத் தீர்த்துக்கொள்ளுகிறார்கள். புது வாழ்வை மேற்கொள்ளுகிறார்கள். இதனால் பொது வாழ்வுக்குரிய புதிய திறமைகளைப் பெறுகிறார்கள். இதைத் தான் 'இளமை தீர்திறம்' என்ற சொற்றொடர் விளக்குகிறது

8. குடும்ப வாழ்க்கை தொடங்கிய காலத்தில் நினைத்த பொழுதெல்லாம் ஒருவரை ஒருவர் தழுவுவதிலேயே இன்பங் கண்டு வருகிறார்கள். வெறும் விலங்கு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். அந்த வாழ்க்கையிலிருந்து மாறி உயரத்

தொடங்கிவிட்டார்கள், இப்போதுதான் அவர்கள் உண்மையான மனித நிலைக்கு உயர்ந்திருக்கிறார்கள், அது மட்டுமா? மாமனித நிலையிலிருந்து பணியாற்றுவதில் ஏற்படும் நிலையான இன்பத்தைப் பெறும் அனுபவத்தை உணர்கிறார்கள், மாமனித நிலைக்கு உயர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் 'தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்'' என்ற சொற்றொடர் விளக்குகிறது. 'தேறுதல்' என்றால் தங்கள் குடும்பத்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், நண்பர்களுக்கும் மட்டும் பணிபுரியும் நிலையிலிருந்து மனித குலத்துக்கே, உயிர்க்குலத்துக்கே பணிபுரியும் நிலைக்கு உயர்ந்துவிடும் நிலை என்பது பொருள்.

9. இவ்வாறு அன்பு அருளாக விரிந்து மலர்கிறது. குறுகிய ஆசைகள் மறைகின்றன. உயிர்க்குலத்துக்கே பணிபுரியும் நிலைக்கு உயர்ந்து போற்றப்பெற்று விளங்குகிறார்கள். இதைத்தான் 'மிக்க காமத்துமிடல்' என்ற சொற்றொடர் விளக்குகிறது. 'மிடல்' என்ற சொல் மிடுக்கு ஆற்றல் என்ற பொருள்களை உடையது.

10. இந்த நான்கு நிலைகளும் மாமனித வாழ்க்கைக்கு உரிய நான்கு எல்லைகள் ஆகும்.

*11.* கைக்கிளை ஒழுக்கம் கணவன் மனைவியின் நன்மை தீமைகள் பற்றி நான்கு வகையாகச் சொல்லியிருக்கிறது.

'பெருந்திணை' என்ற சொற்றொடரின் உண்மைப் பொருள் என்ன? (பழைய உரையாளர் கூறுவனவெல்லாம் பொய்ப் பொருள்) நிலையான பெருவாழ்வுக்குரிய ஒழுக்கமாகிய உயிர்க் குலத்துப் பணி செய்வதில் உறுதியான நடைமுறையை மேற்கொள்ளவேண்டும் (என்பதாகும்).

இந்த நூற்பாவில் உள்ள சொற்களுக்கும், கூறப்பெற்றுள்ள பொருள்களுக்கும் உரிய நேரடி இயைபு எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிகிறது. பின்னர்க் களவியல் கற்பியல்களுள் கூறப்படும் தலைவன்|தலைவியரின் இளநிலைக் காதல் உணர்வுகளும், கூடுதலுறுதல், புணர்ச்சிமகிழ்தல், ஊடல் ஊடலுவகை முதலியவை வெறும் விலங்கு வாழ்க்கை என்பதும் திருவள்ளுவர் காமத்துப்பாலுள் கூறும் 25 அதிகாரச் செய்திகளும் இந்த விலங்கு வாழ்க்கையைப் பற்றியவையே என்பது

மாகும். மேலும் உயிர்க்குலத்திற்குப் பணிபுரியும் மாமனித வாழ்க்கையே பெருந்திணை என்பதும் ஓரளவு புரிகிறது.

இதுபற்றிச் சத்திய கங்கை இதழில் (15–3–82) ஆராய்ச்சி யாளர் திரு. பகீரதன் அவர்கள் பகர்ந்துள்ளவை இப்பெருந் திணைபற்றிப் புரிந்து கொள்ள உதவும். அவையாவன:

"மனிதன் மாமனிதனாகிப் பெரிய ஒழுக்கத்தைப் பெற்று விளங்குவதற்குப் பெருந்திணை என்று பெயர். பெருந்திணைக் குரிய இலக்கணத்தைப் புலவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் புரிந்து கொள்ளாமல் மட்டும் இருந்தாலும் மன்னிக் கலாம். விலங்கு வாழ்க்கைக்குரிய வெறும் உடலுறவுப்பசியை சிற்றின்ப வெறியைப் பற்றிப் பெருந்திணை பேசுகிறது என்று ஏன் ஒழுக்கக் குறைவாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இதை நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது. தமிழ்ப் புலவர் களிடம் இப்படி ஒழுக்கக் குறைவான எண்ணங்கள் இருப்பதற்கு என்ன காரணம்? இவர்கள் ஒழுக்கத்தை வற்புறுத்தும் தமிழ் இலக்கியங்களைப் படிப்பதில்லை. தவறான சங்க இலக்கியங் களை மட்டுமே அதிகமாகப் படிக்கிறார்கள். அவற்றில் இருக் கும் சிற்றின்பக் கிளர்ச்சியை ஊட்டும் பாடல்களிலேயே தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கிறார்கள். அந்த மன உணர் வைக் கொண்டு ஒழுக்கத்திற்கு இலக்கணங்கூறும் தொல் காப்பிய இலக்கணத்திற்குப் பொருள் காண்கிறார்கள். அதனால் தொல்காப்பியம் கூறும் பெரிய ஒழுக்க உணர்வுகளை அவர் களால் புரிந்து கொள்ள முடியவில்லை."

"இந்த இடத்தில் சங்க இலக்கியப் பாடல்களைப் பற்றி ஒரு வரலாற்று உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன் இப்போது அச்சில் இருக்கும் சங்க இலக்கியப்பாடல்கள் மொத்தம் 2400 இவற்றுள் சுமார் 150 பாடல்கள்தான் தமிழ்மரபுடன் கூடிய உண்மையான சங்க இலக்கியப் பாடல்கள். இந்தப் பாடல்கள் (150) தான் சான்றோர்களால் தமிழ் மரபுடன் பாடப்பெற்ற பாடல்கள். கீழ்க்கணக்கு நூல்களுள் மாறன் பொறையனார் பாடிய ஐந்திணை ஐம்பது என்ற நூல் மட்டுமே தமிழ் மரபுடன் கூடிய இலக்கியம். மற்றவை எல்லாம் பிற்காலத்தில் யாரோ எழுதிச் சேர்த்த புலன் உணர்வை ஊட்டும் செய்யுட்கள் தான்".

இவ்வாராய்ச்சியாளர் கண்டுணர்த்தியுள்ள உண்மையைக் காணும்போது தொல்காப்பியத்தில் மட்டுமன்றி இலக்கியங்களி

30470

லும் ஏராளமான பாடல்களை இடைச்செருகலாகவும் முழுச் செருகலாகவும் யாரோ பாவிகள் செய்துள்ளமை புலனாகின்றது.

இங்கே எனக்குத் தர்ம சங்கடமானதொரு ஐயம் தோன்றி உள்ளத்தை வாட்டுகிறது அஃதாவது. தேவார நால்வர்களும் ஆழ்வார்களும் வள்ளலார் உட்பட அருளாளர் யாவரும் ஏராளமான இன்பத் துறைப் பாடல்களைப் பாடியுள்ளனரே. அவையெல்லாம் உண்மையா, பின்வந்தோரால் எழுதிச்சேர்க்கப் பட்டவையா ? ஒரே ஒரு பாடலை மட்டும் பார்ப்போம்

"தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உவந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உவந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலியோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

என்பது திருவாசகம். மேலும் திருக்கோவையாருள் மடற்றிறம் என்னும் கிளவித் தொகையுள் ஒன்பது துறைகள் உள ஒரு எடுத்துக்காட்டு.

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலை கலந்து
வீசின போதுள்ள மீனிழந்தார், வியன்தென் புலியூர்
ஈசன சாந்தும் எருக்கும் அணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சினமாவென ஏறுவர் சீறூர் பனைமடலே (கோவை 74)

வடலூர் வள்ளலார் கசிந்துருகிப் போற்றும், அறிவாற் சிவனே என்று சைவர்கள் போற்றும் மாணிக்கவாசகர் தொல் காப்பிய நெறியைச் சிறிதும் உணராமல் இங்ஙனம் ஒழுக்கக் குறைவான பாடல்களைப் பாடியிருப்பாரா. இவற்றை எட்டாம் திருமுறையாக வேறு வைத்துப் பாராட்டுகின்றனரே இது விதியா சதியா என்பது புரியவில்லை.

இவ்வாறே வைணவத்தில் திருமாலின் அமிசமாகப் போற்றப்பெறும் திருமங்கையாழ்வார் ஒன்றல்ல பெரிய திருமடல், சிறிய திருமடல் என்று இரண்டு மடல்கள் பாடி வைத்துள்ளார்.

இங்ஙனம் நால்வரும் ஆழ்வார்களும் செய்துள்ள பெரும் பிழைகளை எண்ணும்போது ஒரு பெரிய ஏக்கம் தோன்றுகிறது அஃதாவது, இவ் ஆராய்ச்சியாளர் இருவரும் கி. மு. முதல் நூற்றாண்டிலேயே அவதரித்திருந்து தொல்காப்பியத்தின்

உண்மைப் பொருளை வரைந்திருந்தால் சங்கப் புலவர்கள் முதல் நாயன்மார் ஆழ்வார்கள் எல்லோரும் தமிழ்நெறி தவறியிருக்கமாட்டார்களே இறைவன் இப்படிச் செய்துவிட்டானே என்பதுதான். அப்படி நேர்ந்திருந்தால் இன்றைய புலவர்களும் கெட்டுப்போயிருக்கமாட்டார்களே. என்செய்வது அதுதான் விதி.

இனி பிழையறப் புதுப்பிக்கப் பெற்ற இந்நூலில் இவர்களால் உருவாக்கிச் சேர்க்கப்பட்டுள்ள அடிகள் பற்றிய என் ஐயங்கள் பல எடுத்துக்காட்டாக ஒவ்வொரு படலத்திலும் ஒவ்வொரு நூற்பாவை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன். எழுத்துப்படலம் நூன்மரபு முதல் நூற்பா :

நூல்எனப்படுப எழுத்தைக் குறிப்பன
அவற்றுள்
சொல்லும் பொருளும் ஆகுபெயராய்
வகுத்துக்காட்டல் வல்லோராறே
எழுத்தெனப்படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப தாய்உயிர் மேலவை
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே.

இதன்கண் முதல் நான்கடிகளும் 'தாய் உயிர் மேலவை' என்ற தொடரும் இவர்களால் சேர்க்கப்பெற்றவை. எழுத்துப் பற்றிய எல்லாவற்றையும் இலக்கண முறைமையாற் புலப்படுத்த முற்பட்ட ஆசிரியர் அவற்றை ஒன்பது இயல்களாகப் பகுத்தோதுகின்றார். முதற் பகுப்பிற்கு நூன்மரபு என்று பெயரிட்டுள்ளார். இவ்வியலுள் உணர்த்தமுற்பட்டவை எழுத்துக்களின் தொகை, வகை, பெயர் இசை ஒலி அளவு பெயர் கூறுங்கால் இயைபு பற்றி வரும் பெயரும் சுட்டுகின்றார். அஃதாவது தடையின்றிக் கண்டத்தினின்று எழுவன உயிர் ஒரு மாத்திரையளவினது குறில் இரண்டு மாத்திரை அளவினது நெடில். மூன்று மாத்திரை தனி எழுத்துத் தமிழில் இல்லை. நீட்டம் வேண்டின் குற்றெழுத்து இசையைத் துணை பெற்று நீளும். அவ்வழி அதன்பெயர் அளபெடை என்று பெயர் கூறிச் செய்யுளிடத்து நீள்வது இசைத் தமிழ் இயல்பு என்று புறனடை கூறி எழுத்து நிலையினின்றும் மாறிப் பிறபொருள் தருமிடத்து அ,இ,உ. மூன்றும் சுட்டு என்றும் ஆ,ஏ,ஓ மூன்றும் வினா என்றும் பெயர் பெறும் என்றும் விளக்கினார். அவ்வாறே மெய்கட்கும் பெயர்கூறி அவை சொல்லகத்து

ஒருங்கால் பின் நிற்கும் மெய்யின் ஒலியால் மயங்கும்என்றும் கூறினார் தனித்து வருதலின்றி ஒரு சொல்லின்கண் பிற எழுத்தைச் சார்ந்து வரும் ஃ குற்றியலிகரம் குற்றியலுகரம் மூன்றும் சார்ந்து வரல் மரபின என்றார். (சார்பெழுத்தெனல் இவர்கட்கு உடன் பாடில்லை)

இங்ஙனம் கூறிய நூற்பாக்களால் இவ்வியல் எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் இயல் என்பது கூறாமலே விளங்கும் அதனான் நூன்மரபு' என்றால் எழுத்து மரபு 'நூல்' என்பது எழுத்தைக் குறிக்கும் உவம ஆகுபெயர்ச் சொல் என்பதை உரையாளர் தெளிவு படுத்துவார் அஃது உரையாளர் பொறுப்பு. ஏனெனின் சொற்கள் வெளிப்படை குறிப்பு என இருதிறத்தான் பொருளுணர்த்தும் என்றும் குறிப்புப் பல்வகைப் படும் அவற்றுள் ஆகுபெயர் ஒன்று என்றும் ஆசிரியர் சொற் படலத்துள் கூறுதலான் என்க. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்பது நூற்பாவிற்குரிய தலையாய இலக்கணம்.

உரையாளர் விளக்கவேண்டியவற்றை ஆசிரியர் குறிப்பால் உணர்த்துவதன்றி எல்லாவற்றையும் விரிவுரையாக விளக்க முற்படின் அஃது உரைநடையாகுமேயன்றி இலக்கண நூற்பா வாகாது. எனவே இவ்விளக்கத்தை நூற்பாவோடு சேர்த்துக் கூறின் அஃது மிகைபடக் கூறலாய் நகைப்பிற்கிடமாகும் 'மேலும் நூல் எனப்படுப எழுத்தைக்குறிப்பன' என்று விளக்கிய பின் அது வெளிப்படைச் சொல்லாகி விடுகின்றது. பின்னர் எவ்வாறு சொல்லையும் பொருளையும் ஆகுபெயராய் உணர்த்தும்? மற்று வகுத்துக் காட்டல் வல்லோர் ஆறே என்பது புறனடை அமைப்பு. இஃது ஒரு பொருள் பற்றிய இலக்கண மெல்லாம் கூறி முடித்தபின் எஞ்சியவை இருக்குமாயின் அவற்றையும் தழுவுவதற்குக் கூறும் இலக்கண நூல் அமைப்பு முறையாகும்.

இனி, தாய் உயிர் மேலவை, என்பது யானைக்கால் போல விங்கி ஆறாவது விரல்போலத் தொங்குகிறது. தாய் உயிர் என்று ஒருவகை ஆசிரியரால் யாண்டும் சுட்டப்பெறவில்லை. இவர்கள் கண்டுபிடிப்பின்படி குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் மூன்றும் தாய் உயிராயின் அவை தனித்தும் வரல் வேண்டும் உச்சரிக்கப்படல் வேண்டும். மேலும் இகர உகரங்கள் அகரத்தின் மறுகோணங்களேயாம் அம்முறையில்

ஆய்தம் மட்டுமே தாய் உயிராகின்றது. இத்தொடர் எவ்வாறு சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே என்பதனோடு இயை கின்றது. இந்தச்சிக்கலைக் கருதியே ஒரு நூற்பாவிற்காவது இவர்கள் பதவுரை கூறவில்லை என்றாகிறது.

இனி, சொற்படலம் தொடக்கவியல் கிளவியாக்கம். இரு திணைப் பொருள் மேலும் சொற்கள் எவ்வாறு உருவாகின்றன, அவற்றைப் பிழையின்றித் தொடர்களிடத்துக் கையாள்வது எப்படி,என்பவற்றைக்கூறுவதாகும். இவ்வியல் தொடக்கத்தில் சொல் என்பதற்கு வரை இலக்கணம் வேண்டுமென்று கூறிப் பெயரியல் தொடக்கத்துச் சொல்லையும் பொருளையும் பற்றிப் பாயிரமாகக் கூறியுள்ளவற்றுள் இரண்டு நூற்பாக்களை எடுத்து அவற்றுடன் இரண்டடிகளைப் புனைந்து ஒரு நூற்பாவாக வைத்துள்ளார்கள் அது வருமாறு :

சொல்லெனப்படுப பெயரே வினையென்று
ஆயிரண்டென்ப அறிந்திசினோரே
இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்று வழிமருங்கிற்றோன்றும் என்ப
கிளவியாக்கம் திணைபால் எண் இடம்
வேற்றுமை காலம் விரிபுல நுகர்வே. என்பதாகும்

எழுத்துக்கள் பிற பொருள் தரும் நிலையில் அவை தனித் தும் இணைந்தும் தொடர்ந்தும் மொழியாகும் என்று, எழுத்துப் படலம் மொழிமரபில் ஆசிரியர்

ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே

என்று கூறியவர் அவை எங்ஙனம் பொருள்மேல் ஆகிவரும், பொருள் என்பவை யாவை, என்பதைச் சொற்படலத்துள் அதனை முதற்கண் கூறவேண்டிய கடப்பாட்டான். முன்னர் எழுத்துப் படலத்துப்புணரியலுள்

"உயர்திணைப்பெயரே அஃறிணைப் பெயரே
ஆயிரண்டென்ப பெயர்நிலைச்சுட்டே"

எனப்பெயரின் வகை கூறியவிடத்து இயைபின்மையின் திணை என்பதுபற்றி ஆண்டு யாதுங்கூறாமல் சொற்படலத்து முதற்கண்

உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே. "

எனத் தோற்றுவாய் செய்துள்ளமையை ஓராமல் இதனை ஒரு நூற்பாவின் பிற்பகுதியாக்கி மூன்றாவதாக வைத்துள்ளார்கள்

ஓரியலுள் கூறும் செய்திகளை முதற்கண் தொகுத்துக் கூறல் உரையாளர் பொறுப்பாகும். அதனை நூற்பாவால் ஆசிரியரே கூறல் மிகைப்படக் கூறலாகும், மற்று. கிளவி என்பது "சகரக் கிளவி", "வகரக்கிளவி" என்றாற்போல எழுத்தையும், "உரை யசைக்கிளவி, மாரைக்கிளவி" என்றாற்போல அசையையும் "பெயர்நிலைக்கிளவி, வினையெஞ்சுகிளவி" எனச்சொல்லையும் "இருநான்குகிளவி", "தொல்லோர்கிளவி" எனத் தொடரையும் குறித்துவரும் ஒரு காரணப்பெயர், கிள் என்னும் வேரின்றும் கிளை, கிளி, கிள, கிளத்தல், கிளவி எனச்சொற்கள் தோன்றும் நாவால் கிளக்கப்படுவது என்பது இதன் பொருள். இவர்கள்

"கிளவியாக்கம் சொற்றொடராக்கமே" எனத் தேற்றேகாரம் கொடுத்துப் புதுநூற்பாவைப் புனைந்துள்ளார்கள்.

மொழி என்பது பற்றி மொழிமரபினுள்ளும். சொல் என்பது பற்றி நால்வகைச் சொற்களைப் பற்றிக்கூறும் இயல்களுள் முதல் இயலாகிய பெயரியலுள் பாயிரமாக முதற்கண்ணும் இயைபு பற்றி விளக்கமுள்ளமையான் அவற்றை ஈண்டுக் கொணர்ந்து தேவையற்ற அடிகளைப் புனைந்து கூறியிருப்பது மிகையாகும்.

மேலும் கிளவியாக்கம் என்பதற்கு விளக்கமாக
"கிளவியாக்கம் திணைபால் எண் இடம்
வேற்றுமை காலம் விரிபுல நுகர்வே" என்னும்

அடிகளைப் படைத்துள்ளனர். மீண்டும் "திணை முதல் பலவும் துணை செயுமென்ப" என்று கூறுகின்றனர். இவற்றுள் 'எண்' என்பது ஆங்கிலமொழிப் பயிற்சிக்குப் பின் தோன்றிய வழக்கு அது தமிழுக்குப் பிழை வழக்காகும் காரணம் ஆங்கிலத்திலும், வடமொழியிலும் பால் பாகுபாடு சொல்வழி அமைந்தனவாகும். பால் கூறிய வழி எண் விளங்காது தனியே கூறுதல் வேண்டும். அஃதாவது ஜெண்டர் வேறு நம்பர் வேறு. வடமொழியில் லிங்கம்வேறு, வசனம் வேறு, அதனான் ஆங்கிலர், மாஸ்குலைன்

பெமினையின், நியூட்டர், எனவும் சிங்குலர், புளூரல் எனவும் வடமொழியில் புல்லிங்கம், ஸ்திரிலிங்கம், நபும்சகலிங்கம் எனவும் ஏகவசனம், துவிவசனம், பகுவசனம் எனவும் பிரித்துணர்த்த வேண்டிய நிலை அவற்றிற்கு ஏற்பட்டது. தமிழில் பால் என்பதே எண்ணின் அடிப்படையிலும் அமைந்ததாகும். ஆடூஉ வறிசொல் என்றால் ஆண்பால் ஒருமை என்பதன்றி வேறு படாது. ஒன்றறி சொல் என்றால் அஃறிணை ஒருமை என்ப தன்றி வேறுபடாது. தமிழில் திணைப்பகுப்புண்டு அம்மொழி களில் இல்லை. எனவே 'எண்' என்று இவர்கள் நூற்பா செய்தது எவ்வாறு? மேலும் திணைபால் இடங்காட்டுதல் பெயர்க்கும் வினைக்கும் பொது, வேற்றுமை பெயர்க்கு மட்டுமே உரியது காலம் வினைக்கு மட்டுமே உரியது. இவை பொது வென்பது போல அமைத்திருப்பது மயங்கவைத்தலாகும்.

இனி, பொருட்படலத்துள் பெய்ப்பாட்டியலை முதலியலாக வைத்துள்ளனர். அதற்குக் காரணம் கருவியியல்கள் முன்னும் செய்கையியல்கள் பின்னும் அமைதலே முறை எனகின்றனர். கருவி செய்கை என்பதற்கு இவர்கள் கொள்கை விபரீதமாக உளது.

ஒரு பொருளைப் படைப்பதற்கு அடிப்படையாக உள்ள வற்றைக் கருவியென்பர், அவற்றைத் தாம் கருதும் பொருளாக அமைக்க நிகழ்த்தும் செயலைச் செய்கை என்பர். இங்ஙனம் கருவிகளைச் செய்கை வாயிலாக உருவாக்கும் படைப்பு, பொருள் எனப்படும்.

அக்கருவி முதற்கருவி, துணைக்கருவி, நிமித்தகருவி என்றும் ஒற்றுமைக் கருவி வேற்றுமைக் கருவி என்றும் வகைப்படும். செய்கை என்பது ஒன்றே அஃது ஒரு கருத்தாவினுடைய பல்வகை வினையாக இருக்கும்.

அம்முறையில் தொல்காப்பியம் என்னும் இம்மொழியிலக்கண நூல் எதனைப்படைப்பதற்கு நெறிமுறை கூறுகின்றது? இது காறும் தொல்காப்பியத்தைப் பயின்றுள்ள சான்றோர்கள் கருத்தும் முடிபும் தமிழ் மரபும் பண்பாடும் தழுவிய இலக்கியங்களைப் படைப்பதற்கென்பதேயாம். இலக்கியம் என்று இக்காலத்து வழக்கும் பொருளைத் தொல்காப்பியம் செய்யுள் எனக் குறியீடு செய்துள்ளது. அச்செய்யுள் (இலக்கியம்) பாட்டு, உரை, நூல்

வாய்மொழி, பிசி அங்கதம், முதுசொல் என ஏழுவகைப்படும் என்கின்றது. செய்யுளுக்குரிய உறுப்புக்கள் மாத்திரை முதலாக இருபத்தாறும். அம்மை முதலிய எட்டும் என்கிறது அம்மை முதலிய எட்டினையும் வனப்பு என ஒன்றாக்கி இவ்வாய்வாளர் கள் உறுப்பு இருபத்தேழே என்பர்.

இனி, இலக்கியத்திற்குப் பாடுபொருள் அல்லது கருப்பொருள் யாது? பொதுவாக இருதிணைப்பொருளும் சிறப்பாக மக்கள் வாழ்க்கையும் ஒழுகலாறும் மக்களின் கட்வுட் கொள்கைகளு மாகும். எழுத்தானாகிய சொல், சொற்றொடர் யாவும் மேற்கூறிய இருதிணை வாழ்வு பற்றியே ஆக்கம் பெற்று நிகழ்தலின் அவற் றைப் பொருள் எனப் பாகுபாடு செய்தனர் தமிழர். அதனை அக வாழ்க்கை புறவாழ்க்கை எனப் பாகுபாடு செய்து அவற்றின் உட் பிரிவுகளை ஒழுகலாறுகளாக வகைப்படுத்தினர் ஒழுக லாற்றிற்குத் திணை என இலக்கணக் குறியீடு தந்தனர். இது தமிழ் மரபு. அம்முறையில் இலக்கியம் (செய்யுள்) படைத்தற் குரிய மூலப்பொருள் அல்லது முதற்கருவி மக்களும் அவர்தம் ஒழுகலாறும் என்பதில் ஐயமில்லை. எழுவகையான செய்யுள் படைப்பதற்கு முதற்கருவி அகத்திணை புறத்திணை ஒழுகலாறு கள். துணைப்பொருள் அல்லதுதுணைக்கருவிகள் மெய்ப்பாடும் உவமமும். இவற்றைச் செய்யுளாக (இலக்கியமாக)ப் படைக்கும் செய்கை முறையும் மரபும் பற்றி ஆசிரியர் முறையாகக் கூறுதல் வேண்டும். அதனான் அகமும் புறமுமாகிய பொருளை (கருவி) முற்கூறி அவற்றின்பின் மெய்ப்பாடும் உவமும் (துணைக்கருவி) கூறிச் செய்யும் முறைமை பற்றிய செய்யுளியலையும் மரபியலை யும் இறுதியிற் கூறியுள்ளதாக இளம்பூரணர் காலத்திலிருந்து மரபாகக் கொண்டுள்ளனர்

இவ்வாராய்ச்சியாளர்கள் அகத்திணை புறத்திணையாகிய பொருள்களைச் செய்கை இயல்கள் என்றும், மெய்ப்பாடு உவமம் மரபு செய்யுளியல் இவற்றைக் கருவியியல் என்றும் கூறுகின்ற னர் அகத்திணை புறத்திணை ஒழுகலாறுகள் நிகழ மெய்ப் பாடும் உவமும் செய்யுளும் மரபும் எவ்வாறு கருவியாகின்றன என்று எனக்குச் சுத்தமாகப் புரியவில்லை மெய்ஞ்ஞான உணர் வுகை வரப்பெற்ற இவ்வாய்வாளர்கள் என்பால் இரக்கமுற்றுத் தடை விடைகளால் விளக்குதல் வேண்டும்.

அகத்திணையியல் முதலியவற்றை இவர்கள் செய்கை இயல் என்பதற்குக் காரணம், தொல்காப்பியம் படைப்பிலக்கிய நெறி

முறைகளைக் கூறுவதாகக் கொள்ளாமல் மக்கள் வாழவேண்டிய வாழ்க்கை நெறி முறைகளைக் கூறுவதாக வலியுறுத்துகின்றனர் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய அறநெறிமுறைகளைக் கூறற்குரியவை நீதிநூல்கள் - அரசியல் சட்ட நூல்கள் என்பது என்போன்றார் கருத்தாகும். இவற்றிற்கெல்லாம் விவரமான விளக்கம் தரவேண்டியது இவர்களின் பொறுப்பாகும். இஃதொரு புறமிருக்க, பொருளதிகாரத் தொடக்கத்தைச் சிறிது பார்ப்போம்.

மெய்ப்பாட்டியலை முன்வைத்தவர் அதுபற்றித் தொடங்காமல் அகத்திணையியலிலிருந்த நான்கு நூற்பாக்களை முதற்கண் வைத்துத் தொடங்கி அவற்றுடன் மெய்ப்பாட்டுறுப்பு செய்யுளுக்கு எதற்கு என்பதற்கு விளக்கமாகச் செய்யுளியலுள் கூறிய இரண்டு நூற்பாக்களை வைத்து மெய்ப்பாட்டியலின் புறனடை நூற்பாவையும் கூட்டி நாடகச் சுவை பற்றிக் கூறும் நூற்பாக்களுடன் யாவற்றையும் ஒரு நூற்பாவாக்கி முதற்கண் வைத்துள்ளனர் தொடக்கம்

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே என்பதாகும்

பொருள் என்பது மக்கள் ஒழுகலாறாகிய திணைகளே. ஆதலின் பொருட்படலத் தொடக்கத்தை ஆசிரியர்

''கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக்கிளந்த எழுதிணை என்ப''

என்று தொடங்கி அத்திணைகளை உணர்தற்குரிய உறுப்புக்கள் முதல்கரு உரி என்னும் மூன்றே எனக் கூறினார். இவர்கள் முதல்கரு உரி என்பவைகளே பொருள் என்று கருதும் வண்ணம் வைத்துள்ளனர் 'நுவலுங்காலை முறை சிறந்தனவே' என்பதற்குக் காரணம் சான்றோர் செய்யுட்களுள் அவை அவ்வாறு அமைந்துள்ளன என்பதை விளக்குவாராய் ஆசிரியர் 'பாடலுள் பயின்றவை நாடுங்காலை' என்றார் இத்தொடர் ஏதுவாக்கியமாகும் இத்தொடரை யாதொரு இயைபுமின்றி அடுத்த நூற்பாவோடு சேர்த்து வைத்துள்ளனர் '' பொருளெனப்படுவது உயர்ந்தோர் ஒழுக்கமே'' என்றாற்போல யாதும் உருவாக்கிச் சேர்க்காதது பொருளதிகாரத் தொடக்கத்திற்கு இவர்கள் கருத்துப்படி குறையாகும். இவை நிற்க,

இனி அகத்தியர் இவ்வாறுதான் எழுதியிருப்பார் என்று ஞான திருஷ்டியால் நோக்கி உருவாக்கியுள்ளவற்றுள் படலத்

திற்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு பார்ப்போம்.
நூன்மரபு இரண்டாவது நூற்பா :

அவைதாம், ஆய்தம் என்ற குற்றியலகரம்
குற்றியலிகரம் குற்றியலுகரமாம்
முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன. என்பதாகும்

"அவைதாம், குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்த மென்ற
முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன"

என்பது வழக்கிலுள்ள தொல்காப்பிய நூற்பா.

இவர்கள் உருவாக்கி உள்ள நூற்பாவிற்கு எழுதியுள்ள கருத்துரை "அந்த மூன்று சூக்கும உயிரெழுத்துக்கள் ஆய்தம் என்ற குற்றியலகரம் குற்றியலிகரம் குற்றியலுகரமாகும். அந்த மூன்று சூக்கும உயிர்களைக் கொண்டுதான் மற்ற முப்பது எழுத்துக்களையும் உருவாக்கி உச்சரித்துப் புரிந்து கொள்ள முடியும். இதைத்தான் எழுத்து ஓரன்ன என்ற சொற்றொடர் உணர்த்துகின்றது, என்பதாகும்.

இவ்வாராய்ச்சியாளர்கள் 'குற்றியல் அகரம்' என்பதை ஆய்த எழுத்தின் பிறிதொரு பெயராகக் கூறியுள்ளனர். இப் பெயரை ஆசிரியர் இந்நூலுள் எவ்விடத்தும் எடுத்தாளவில்லை. தொல்காப்பியத்தைப் பார்த்து அதன் வழிச் செய்யப்பட்டதாக இவர்கள் கூறும் பாணினீயத்தில் இந்த சூக்கும உயிர்கள் இல்லை. எனினும் 52 எழுத்துக்களை உருவாக்கிப் பல இலக் கியங்களைச் செய்துள்ளனர். உலக மொழிகள் பிறவற்றிலும் இம்மூன்று சூக்கும உயிர்களைப் பற்றிப் பேச்சில்லை. இளம் பூரணர் முதல் இன்று வரையுள்ள ஆசிரியர் எவரும் 'குற்றிய லகரம்' என்று ஒன்று இருப்பதாக உணரவே இல்லை அது நிற்க இப்பெயருக்குள்ள செயற்பாடு அதன்கண் உள்தா என்று பார்ப்போம்.

உயிர் எழுத்துக்கள் தனித்துத் தடையின்றி உயிர்த்தல், மெய் யினை ஊர்ந்து அம்மெய்யினை உயர் மெய்யாக்குதல் என்னும் செயற்பாடுடையவை. குற்றியலிகரம் மியா என்னும் இடைச் சொல்லின்கண் மகர மெய்யை ஊர்ந்தும். குற்றுகரம் கெட்ட இடத்து அதற்கு ஈடாக நாகியாது வரகியாது என வல்லெழுத்தை ஊர்ந்தும் வரும் என்று விதி கூறியுள்ளார் ஆசிரியர் அவ்வாறே இலக்கியங்களில் பயின்றும் வருகின்றது குற்றிலுகரம் நுந்தை

என்னும் ஒரு சொல்லில் மட்டும் நகர மெய்யினை ஊர்ந்து முதற் கண்ணும் தனிக் குறில் தவிர்ந்த ஈரெழுதொரு மொழி தொடர் மொழிகளில் வல்லின மெய்களை ஊர்ந்து இறுதியிலும் வரும் என்று விதி கூறுகின்றார் ஆசிரியர். அவ்வாறே இலக்கியங்களில் நாகு சுக்கு, வண்டு, உல்கு, வரகு, எஃகு எனப் பயின்று வருகின்றது இவை முற்றியலிகர முற்றியலுகரங்களினின்றும் பொருள் வேறுபாடு செய்யும் என்றும் கூறுகின்றார் ஆசிரியர்.

ஆய்தம் தனித்தும் ஒலிப்பதில்லை. எந்த மெய்யினையும் ஊர்வதும இல்லை. குறிலுக்கும் வல்லினமெய்க்கும் இடையில் மட்டுமே வரும் அதனான் இதற்குத் தனிநிலை என்பதொரு பெயரும் கூறுவர். ''எழுத்தின் இயலா ஆய்தம்'' என்பார் ஆசிரியர். குற்றியலிகரம் முதலிப மூன்றும் ஒருமொழியினிடமாக வன்றி அ, ஆ என்றாற்போலத் தனித்து இயங்கா இவற்றை முதலாகக் கொண்டு சொல்லாக்கம் நிகழ்வதில்லை அதனான் இவற்றைச் சார்பெழுத்தென்றார் ஆசிரியர் என்பது உரையாளர் பிற ஆய்வாளர்களின் கருத்தாகும். இவ்வாய்வாளர்கள் சார்பெழுத்து என்று ஒன்றும் இல்லை, ஆசிரியர் கூறவே இல்லை என்று சாதிக்கின்றனர்

சார்ந்து வரல் மரபின் மூன்று (எழு-1) சார்ந்து வரினல்லது தமக்கியல்பிலவெனத் தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்று (பிறப்-2) என ஆசிரியர் தெளிவாகக் கூறியிருப்பவும் அதனை ஒப்பாது இத்தொடர்களுக்கு வேறு பொருள் கூறுகின்றனர். எனவே 'குற்றியலகரம்' என உருவாக்கிச் சேர்த்த குறியீடு நூற் கருத்துக்கு ஏற்றதாக இல்லை.

இனி, கிளவியாக்கம் ஏழாவது நூற்பா

''அஃறிணை மருங்கின்பால் பிரிந்திசைக்கும்
ஒன்றறிகிளவி தறடஊர்ந்த
குன்றியலுகரத் திறுதியாகும்
அ ஆ வ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே''

இந்நூற்பாவில் முதலடி இவர்கள் உருவாக்கிச் சேர்த்தது. இதன் இலக்கணப் பயன் யாது? ஒன்றறி கிளவியும், பலவறி சொல்லும் அஃறிணை மருங்கின என்பதாயின் அவ்விளக்கம் முன்பே ''ஒன்றறி சொல்லே பலவறி சொல் என்று
ஆயிருபாற் சொல் அஃறிணை யவ்வே''

என்றதனால் பெறப்படும். எனவே இத்தொடர் கூறியது கூறல் என்னும் சிதைவாகும். இவர்கள் சிதைவு பற்றிய நூற்பாவை இடைச்செருகல் என்று கூறி நீக்கிவிட்டமையான் சிதைவு பற்றிய கவலை இவர்களுக்கு எழவில்லை எனத் தெரிகிறது

பொருட்படலம் மெய்ப்பாட்டியலில் இவர்கள் எதையும் உருவாக்கிச் சேர்க்கவில்லையாதலின் அடுத்த உவமவியல் தொடக்கத்தை ஈண்டு எடுத்துக்கொள்வோம். இதன் முதல் நூற்பாவில்

''எடுத்தபொருளுடன் ஒத்ததே உவமை''

என்னும் முதலடி இவர்கள் உருவாக்கிச் சேர்த்ததாகும். உவமம் என்ற சொல்லின் பொருளே அதுதான். அஃது ஒக்கும், ஒவ்வும் என்னும் வினையின் பெயர் வடிவமாகும் மேலும், எழுத்துப்படலம் உயிர் மயங்கியலுள் அகர ஈற்றுப்புணர்ச்சி விதி கூறுமிடத்து அன்ன என்னும் உவமக் கிளவியும் என்றதனான் உவமம் என்பது அத்தன்மைய உடைய என்னும் பொருளில் வரும் என்பது விளங்கிக் கிடத்தலான் இத்தொடர் மிகைபடக் கூறியதாகும். இங்ஙனம் பல உள.

இனி, பழைய நூற்பாக்களில் நீக்கப்பட்டவை, சேர்க்கப் பெற்றவைக்கு இரண்டொரு காட்டுக்கள் :

மாயோன் மேய காடுறையுலகமும் என்னும் நூற்பாவில், மாயோன் மேய, சேயோன் மேய, வேந்தன் மேய, வருணன் மேய என்றவை நீக்கப்பட்டுள்ளன.

கற்பியலில் ; கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரிமரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரிமரபினோர் கொடுப்பக்கொள்வதுவே

என்னும் நூற்பாப் பொருத்தமற்றது என்பது இவர்கள் நினைப்பு அதனான் அதனை நீக்கிவிட்டனர்.

இனி, செய்யுளியலுள்

''ஒருபொருள் நுதலிய சூத்திரத்தானும்''
''சூத்திரந்தானே ஆடிநிழலின் அறியத்தோன்றி''

என்பன வழக்கிலுள்ள தொடர்கள் இவற்றில் சூத்திரம் என்பதை எடுத்துவிட்டு நூற்செய்யுள் என்பது சேர்க்கப்பட்டுள்ளன.

கற்பியலுள் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்பதில்

'ஐயர் யாத்தனர்' என்பது நீக்கப்பட்டுச் செய்ய நேர்ந்தது கரணம் என்ப. என்று சேர்க்கப்பட்டுள்ளது.

மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே

என்னும் நூற்பாவிற்கு, மேலோர், சேர சோழ பாண்டியர் என்றும், கீழோர் நானிலத்து மக்கள் என்றும் விளக்கம் விரிவுரையுள் தரப்பட்டுள்ளது. கற்பியல் நூற்பாக்களோடு இது சேர்க்கப்படவில்லை. இங்ஙனம் பலவுள.

இனி நயமான உரைப்பகுதியுள் இரண்டொன்று எடுத்துக் காட்டுகின்றேன்.

கற்பியல் தலைவி கூற்றுள் [பக்கம் 1153]

"கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சுபுண்ணுறீஇ
நளியின் நீக்கிய இளிவருநிலையும்" என்பதற்கு

அவன் அன்று எண்ணெய் தேய்த்துக் குளித்திருக்கிறான். இந்த நிலையில் அவன் உணர்ச்சியை வளரவிடாமல் தன் சாமர்த்தியமான பேச்சின் மூலமே அவனை இன்புறச் செய்கிறாள். மனைவியுடன் உரையாடிய உணர்வினால் பெற்ற இன்பத்தில் கணவன் மனநிறைவு பெற்று மகிழ்ச்சியடைகிறான், என்பது பொருளாக வரையப்பட்டுள்ளது.

இனி, தோழி கூற்றுள் வரும் [பக். 1160]

பிழைத்து வந்திருந்த கிழவனை நெருங்கி
இழைத்தாங்கு ஆக்கிக் கொடுத்தற் கண்ணும்
வணங்கியல் மொழியால் வணங்கற்கண்ணும்
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகற்சியும்
சிறந்த புதல்வனைத் தேறாது புலம்பினும்
மாண் நலந்தாவென வகுத்தற் கண்ணும்.

என்னும் பகுதிகட்கு,

மிகப்பெரிய அபாயங்களிலிருந்தெல்லாம் மீண்டு, வெற்றியுடன் திரும்பிய கணவனுக்கு மேலும் மேலும் இது போன்ற வெற்றிகள் பெற அருள் புரியவேண்டும் என்று தொடர்ந்து இறைவனை வழிபடுகிறாள் மனைவி.

இறைவனின் பிரசாதங்களைக் கணவனுக்குக் கொடுத்து அவனை வணங்கி மகிழ்கிறாள் வெளிநாடுகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றுத் திரும்பியிருக்கும் தன் கணவனின் பெருமையைப் பாராட்டி மகிழ்கிறாள்.

இன்னொரு நாட்டில் சிறந்த முறையில் கல்வி பயின்றுவரும் தங்கள் மக்களை அடிக்கடி சென்று பார்க்கமுடியவில்லையே என்று ஏங்குகின்றனர்

அதையும் பொருட்படுத்தாமல் பொதுமக்களுக்குப் பணி புரியும் பேராற்றலைத் தங்களுக்கு வழங்கும்படி கணவனும் மனைவியும் இறைவனை வேண்டிக் கொள்கிறார்கள் என்பவை பொருள்.

இங்ஙனமே அகத்திணையியல், களவியல், பொருளியல் நூற்பாக்கள் பலவற்றிற்கு உரை தந்துள்ளனர்.

இங்ஙனம் மெய்ப்பொருள் காண்பதற்குச் சங்க இலக்கியங் களைப் படிக்கும் தமிழ்ப் புலவர்களுக்கு எவ்வாறு இயலும். தமிழ்ப் புலவர்கள் மட்டுமல்லர், இளம்பூரணர், நச்சினார்க் கினியர் போன்றவர்களுக்கும் இயலவில்லை என்பது அவர்களின் உரையால் அறியமுடிகின்றது. இவர்தம் ஆய்வுரைகளைப் படித்து முழுதும் உணர்தற்கு எம்மனோரால் எக்காலத்தும் இயலாது அருள் கூர்ந்து இப்பேரறிவு சான்ற ஆய்வாளர்கள் இவற்றிற்கு வேண்டிய எடுத்துக்காட்டு இலக்கியச் செய்யுள் களையும் இயற்றி அருளின் தமிழகம் உண்மை நெறியறிந்து உய்வு பெறும். அதற்குப் பாரதிதாசன் பல்கலைக்கழகமும் இராமலிங்கர் பணிமன்றமும் ஆவன செய்ய வேண்டுமென்று அவர்களின் திருவடிகளை வணங்கி வேண்டுகிறேன்.

மற்று, சில சொற்களுக்கு இவர்கள் தரும் விளக்கம் மெய் சிலிர்க்க வைக்கிறது இரு எடுத்துக்காட்டு

காமகிழத்தி :

கணவனும் மனைவியும் மகிழ்ச்சியுடன் வாழ்வதைப் பார்த்து அவர்களை உள்ளன்போடு நேசிக்கும் பெண்ணுக்குக் காமக் கிழத்தி என்று பெயர். (பக். 1165)

பரத்தை :

பரத்தை என்பவர் சமூக சேவகி இதனைப் பொருளியல் 11-ஆம் நூற்பாவில் விளம்புகின்றார். மேலும் ''தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்'' (நூற் - பொருளியல் 16) என்பதற்கு, ''கணவனும் மனைவியும் ஒருகட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும் என்று இவர்களுடன் தொடர்பு கொண்ட பொதுநலப்பணிபுரியும் ஒரு சமூக சேவகி இவர்களுக்கு அறிவுறுத்துகிறாள்'' என விளக்கியுள்ளார்

இதனைப்பார்க்கும்போது அகத்தியர் காலத்திலிருந்த சமூக சேவகிகளைச் சங்ககாலப் புலவர்களும் உரையாசிரியர்களும் இழிவு படுத்தி விட்டார்களே என்மனம் வருந்துகிறது. இதனை உணராத திருவள்ளுவர் ''வரைவில் மகளிர்'' என்று இவர்களைக் கீழ்மைப்படுத்தியுள்ளமை வருந்துதற்குரியாத உள்ளது.

இங்ஙனம் அகத்தியர் நூல் செய்த காலத்திற்கே சென்று அன்றைய சமுதாய அரசியல் நிலைமைகளை எல்லாம் அகத்தியர் செய்தருளியுள்ள தொல்காப்பியச் செய்யுட்கள் வாயிலாக இவ்வாராய்ச்சியாளர்கள் கூறியுள்ள வியத்தகு கருத்துக்களை எல்லாம் எனக்குப் புரிந்த அளவில் முழுதும் எடுத்துரைக்க ஒரு யுகமாவது வேண்டும். அதற்கு வாய்ப்பில்லை எனக்கு உடல் வலியும் இல்லை. ஆதலின் இக்கட்டுரையை இவ்வளவில் நிறுத்தி ஒரே ஒரு வேண்டுகோளுடன் நிறைவு செய்கிறேன்.

## வேண்டுகோள்

இந்நூல் விரிவுரைகளில் ஆங்காங்கே திருக்குறட்பாக்கள் சில மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன அவற்றுள் ஒன்றற்கு உண்மையான பாடமும் ஒன்றற்கு உண்மையான பொருளும் பற்றி விளக்கந்தரப்பட்டுள்ளது. இன்றைக்கு அச்சிலுள்ள முதற்குறட்பா

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவான் முதற்றே உலகு'' என உள்ளது இது

சரியான வடிவமன்று இது அச்சிட்டோர் செய்த பிழை என்று தெரிகிறது இதன் உண்மையான வடிவத்தைப் பக் 31ல்

''ஆதி அகர முதல எழுத் தெல்லாம்
பகவன் முதற்றே உலகு'' என்று அமைத்து,

''இதுதான் திருக்குறளின் வடிவமாக இருக்கவேண்டும்'' என்று

வரலாற்று முறைப்படி செம்மைப்படுத்தியுள்ளனர்.

பக்கம் 783இல் : "பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லதில்லை பொருள்" என்ற குறட்பாவிற்கு "சமுதாயத்திற்கு ஏற்ற ஒழுக்கம் ஒருவரிடம் இல்லாததால் சமுதாயம் அவரை மதிப்பதில்லை. இப்படிச் சமுதாயம் மதிக்கப்படாமல் இருக்கும் ஒருவரை சமுதாயம் மதிப்புடையவராக ஏற்று மதிக்கும் ஒழுக்கத்தை அவர்கற்றுக் கொள்ளும்படிச் செய்து அவரை உயர்த்த வேண்டும். இப்படிச் செய்வதைவிடச் சிறப்பான ஒழுக்கம் வேறு என்ன இருக்கிறது? என்பது இக்குறளின் பொருள்" என்றும், பொருள் என்ற செய்யுளுறுப்புக்கே சிறப்பான விளக்கங்கூறுவதுபோல் திருவள்ளுவர் மிக அருமையாக இந்தச் செய்யுளைப்பாடி வைத்திருக்கிறார்" என்றும் வரைந்துள்ளனர்.

தொல்காப்பியத்தைப் புறக்கணித்துப் பன்னிருபடலம் முதலியவற்றை நம்பி வள்ளுவர் நூல் செய்து விட்டார் என்று வருந்திய இவர்கள் இங்கு உளம் மகிழ்ந்து பாராட்டுகின்றனர்.

அதனான், தொல்காப்பியத்தைப் போலவே திருக்குறளை அச்சிட்டவர்களும் பலதவறுகளைச் செய்திருப்பர். அவற்றையெல்லாம் திருவள்ளுவர் கருத்தினை ஓர்ந்து திருத்தி மேற்கண்டவாறு உண்மையான பாடத்தையும் பொருளையும் இவர்கள் எழுதியருள வேண்டும். அதற்குப் பல்கலைக் கழகங்களும் இராமலிங்கர் பணிமன்றமும் ஆவன செய்யவேண்டுமென்று பல்கால் வணங்கிப் பணிவோடு வேண்டுகிறேன்.

## நிறைவுரை :

இக்கட்டுரையை முடிப்பதற்குமுன் என் காதில் விழுந்த அருவருக்கத்தக்கதொரு செய்தியை இங்கே தெரிவிக்கவேண்டியது என் கடமை.

இத்தொல்காப்பிய நூலினை இங்ஙனம் செம்மை செய்து பதிப்பித்துள்ள ஆராய்ச்சியாளர்கள் திரு. மு. இராமலிங்கம், பகீரதன், என முகப்பிற்காணப்படுகிறது ஆய்வுரை விளக்கவுரைகளில் "உருவாக்கி வைத்திருக்கிறோம், சேர்த்து வைத்திருக்கிறோம்" எனத் தன்மைப் பன்மைக் கூற்றாகவே கூறப்பட்டுள்ளது

30470



இரண்டாண்டுகளுக்கு மேல் தொல்காப்பியம் பற்றிய இவ் வாராய்ச்சிக் கருத்துக்கள் வெளிவந்த சத்திய கங்கையில் கட்டு ரையாசிரியர் பெயர் 'பகீரதன்' என்றே உள்ளது. இதற்கு முர ணாக என் காதில் விழுந்த செய்தி. "இவ் ஆராய்ச்சிக் கட்டு ரைகளை எழுதியவர் திரு. மு. இராமலிங்கம் என்றும் பகீரதன் அவர்களுக்கு இத்துணை இலக்கணப் பயிற்சி கிடையாது" என்பதாகும்.

இதனை என்னால் நம்ப முடியவில்லை. இது பகீரதன் மேல் கொண்ட அழுக்காறு காரணமாக யாராவது கூறியிருக்கலாம். இராமலிங்கம் தாம் எழுதியவற்றைத் தன் பெயரால் வெளியிட அஞ்சும் கோழையாக இருக்கமாட்டார். தன்னடக்கங்காரண மாகத் தன்பெயர் வேண்டாம் என்று கருதியிருப்பின் புனை பெய ரில் வெளியிட்டிருப்பார். அருட்பிரகாச வள்ளலாரின் பெயரைத் தாங்கியிருக்கும் ஒருவர் அப்படிச் செய்திருக்கமாட்டார், பகீரதன் அவர்களுக்குச் சில ஆலோசனை கூறியிருக்கலாம். பதிப்பிற்குத் துணை செய்திருக்கலாம் என்றுதான் கொள்ளவேண்டும்,

மற்று, பகீரதன் அவர்கள் ஒரு சிறந்த பத்திரிக்கை ஆசிரியர் ஒரு சன்மார்க்க சங்க நெறியாளர் மற்றொருவர் எழுதியவற்றைத் தன்பெயரால் வெளியிட்டு வந்தார் என்பது அடாது. இத்தகைய செயலைக் கயவர்கூடச் செய்யார்; மற்றும் சத்திய கங்கையில் சத்தியத்திற்குக்கேடான செயலை அவர் செய்திரார். புராண பகீரதனுக்கு இணையாகச் சத்தியமான தொல்காப்பியத்தை விளக்க உரையோடு கொண்டுவந்துள்ளவர் மீது இத்தகைய பழி சுமத்தல் பொருந்துமா? எனவே யான் இதனை நம்பவில்லை. நீங்களும் நம்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்தார் உண்டென்பதில்லென்பான் வையத்
தலகையா வைக்கப்படும்.

வணக்கம்

தொல்-நை

——————